# பள்ளிக்கல்வித் துறை
# தமிழ்நாடு

# பத்தாம் வகுப்பு
# தமிழ் இரண்டாம் தாள்
# 2012-13

UserMedia.blogspot.com

## வெளியீடு
## பள்ளிக் கல்வித்துறை
## தமிழ்நாடு

மாணவக்கண்மணிகளே!

- முதலில் தமிழ்தானே என்று கருதாமல் தானைத் தமிழ் என்று எண்ணுக.
- விடைகளில் அடித்தல், திருத்தல் வருவதை முற்றிலும் தவிர்த்திடுக.
- வினாக்களையே விடைகளின் தலைப்புகளாகத் தந்து அடிக்கோடிடுக.
- நெடு வினாக்களுக்கு மட்டுமன்று சிறு மற்றும் குறு வினாக்களையும் தலைப்பிட்டு எழுதுவது ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றுத்தரும்.
- வரி ஆரம்பத்தில் ஒற்று ( மெய்) எழுத்துகள் வாராமல் கவனித்து எழுதுக.
- செய்யுள் ( மனப்பாடம்) எழுதும்போது அடி பிறழாது எழுதுவது நல்லது.
- விடைத்தாளின் பக்க இறுதியில் விடைகள் முடிந்தால், அடுத்த வினாவின் விடையை அடுத்த பக்கத்தில் எழுதத் தொடங்குவதே சாலச்சிறந்தது.
- வினாத்தாளில் உள்ள வினா எண்களையே பயன்படுத்துக.

பத்தாம் வகுப்பு | வினாத்தாள் திட்டவரைவு | தமிழ் முதல்தாள்

| நோக்கம்/ இயல் | அறிதல் | | | | புரிதல் | | | | பயன்படுத்துதல் | | | | திறன் | | | | | மொத்தம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வினாவகை | பு. வி | கு. வி | சி வி | | பு. வி | கு. வி | சி வி | | பு. வி | கு. வி | சி வி | | பு. வி | கு. வி | சி வி | | நெ வி | பு. வி | கு. வி | சி வி | | நெ வி |
| மதிப்பெண் | 1 | 2 | 4 | 5 | 1 | 2 | 4 | 5 | 1 | 2 | 4 | 5 | 1 | 2 | 4 | 5 | 8 | 1 | 2 | 4 | 5 | 8 |
| இ - 1 செய் | 1 | | | | | 1+1* | | | | | | ↕ | | | | | ↕ | 1 | 1+1* | | | |
| உரை | | | | | 1 | 1 | | | | | | | | | | | | 1 | 1 | | | 1 |
| இ - 2 செய் | 1 | | | | | | | | | | | | | | 1* | | | 1 | | 1* | | 1 |
| உரை | 1 | | | | | | | | | | 1 | | | | | | | 1 | | 1 | | |
| இ - 3 செய் | 1 | 1 | | | | | | | | | 1 | | | | | | 1+1* | 1 | 1 | 1 | | |
| உரை | 1 | | | | | | | | | | 1 | | | | | | | 1 | | 1 | | |
| இ - 4 செய் | 1 | | | | | | | | | | | | | | 1 | | | 1 | | 1 | | |
| உரை | 1 | | | | | | | | | | 1 | | | | | | | 1 | | 1 | | |
| இ - 5 செய் | 1 | | | | | 1 | | | | | | | | | | | | 1 | 1 | | | |
| உரை | 1 | 1 | | | | | | | | | | | | | | | | 1 | 1 | | | |
| இ - 6 செய் | 1 | 1* | | | | | | | | | | | | | | | ↕ | 1 | 1* | | 1 | |
| உரை | | | | | 1 | 1* | | | | | 1* | | | | | | | 1 | 1* | 1* | | |
| இ - 7 செய் | 1 | | | | | | | | | | | | | 1 | | | | 1 | 1 | | | 1* |
| உரை | 1 | 1 | | | | | | | | | | | | | | | | 1 | 1 | | | |
| இ - 8 செய் | 1 | | | | | | 1 | | | | | | | | | | 1+1* | 1 | | 1 | | |
| உரை | 1 | | 1* | | | 1 | | | | | | | | | | | | 1 | 1 | 1* | | |
| இ - 9 செய் | 1 | | | | | | | | | 1 | | | | | | | | 1 | 1 | | | |
| உரை | 1 | | | | | 1 | | | | | | | | | | | | 1 | 1 | | | |
| இ - 10 செய் | 1 | | | | | | | | | | 1* | | | | | | | 1 | | 1* | | |
| உரை | | 1* | | | 1 | | | | | | | ↕ | | | | | ↕ | 1 | 1* | | 1 | 1* |
| மொத்தம் வினாவகை | 17 | 3+2* | 1* | | 3 | 5+2* | 1 | | | 1 | 4+2* | 2 | | 1 | 1+1* | | 2+2* | 20 | 10+4* | 6+4* | 2 | 2+2* |
| மதிப்பெண் | 17 | 6+4* | 4* | | 3 | 10+4* | 4 | | | 2 | 16+8* | 10 | | 2 | 4+4* | | 16+16* | 20 | 20+8* | 24+16* | 10 | 16+16 |

மொத்த வினாக்கள் 40 + 1 (மனப்பாடப்பகுதி = 10) + 10*
மொத்த மதிப்பெண்கள் = 100 + 40*

கட்டத்தில் உள்ள எண் வினாவைக் குறிக்கும்.

* உடுக்குறியிட்டவை கூடுதல் வினாக்களைக் குறிக்கும்.

குறிப்பு: நெடுவினாக்கள் இரண்டு - செய்யுள் பகுதியில் ஒன்று, உரைநடைப் பகுதியில் ஒன்று. இவ்வினாக்கள் முதல் ஐந்து இயல்களில் இருந்து ஒன்றும் அடுத்த ஐந்து இயல்களில் இருந்து ஒன்றும் அல்லது அல்லது என்னும் முறையில் அமைதல் வேண்டும்.

வினா எண் 45 : இயல் 4, 6, 9, 10 ஆகியவற்றுள் ஒரு பாடல் கொடுத்து 5 வினாக்கள் கேட்கப்படும். வினா எண் 46 : பத்து உரைநடைப் பாடங்களுள் ஏதேனும் ஒரு பகுதி கொடுத்து 5 வினாக்கள் கேட்கப்படும்.

மனப்பாடப்பகுதி : குறளின் தொடக்கம் குறளின் முடிவு என இரு குறள் இடம் பெறும் (2+2). பிற மனப்பாடப்பகுதிகளிலிருந்து 4 மதிப்பெண்ணிற்கான ஒரு பாடல் இடம் பெறும்.

UserMedia.blogspot.com

# செய்யுள்

## ஒரு மதிப்பெண் வினா விடை

1. மாணிக்கவாசகர் பிறந்த ஊர் **திருவாதவூர்.**
2. மாணிக்கவாசகர் பாடல்கள் **எட்டாம்** திருமுறையில் இடம்.
3. மாணிக்கவாசகர் கட்டிய கோயில் **திருப்பெருந்துறையில்** உள்ளது.
4. மாணிக்கவாசகர் **அரிமர்த்தன பாண்டிய** மன்னரிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர்.
5. ஜி.யூ.போப் திருவாசகத்தை **ஆங்கில** மொழியில் மொழிபெயர்த்தார்.
6. திருவாசகத்திற்கு உருகார் **ஒரு வாசகத்திற்கும்** உருகார்.
7. திருக்குறளில் **133** அதிகாரங்களும் **1330** குறட்பாக்களும் உள்ளன.
8. திருக்குறள் **ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன்** முதலான உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது.
9. ஒழுக்கத்தின் எய்துவர் **மேன்மை** இழுக்கத்தின் எய்துவர் **எய்தாப்** பழி.
10. திருக்குறளைப் போற்றி பாடும் நூல் **திருவள்ளுவமாலை.**
11. திருக்குறள் **குறள்** வெண்பாக்களால் ஆன நூலாகும்.
12. 'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' எனப் பாடியவர் **பாரதிதாசன்.**
13. செல்வத்தை நிலையாகக் கட்டும் கயிறாக வள்ளுவர் கூறுவது **காலமறிதல்.**
14. ஏலாதி **பதினெண்கீழ்க்கணக்கு** நூல்களுள் ஒன்று.
15. கணிமேதாவியாரின் காலம் **கி.பி.ஐந்தாம் நூற்றாண்டு**.
16. மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள் **திரிகடுகம், ஏலாதி.**
17. இரட்டைக் காப்பியங்கள் என்பன சிலப்பதிகாரமும் **மணிமேகலையும்** ஆகும்.
18. சிலப்பதிகாரம், மணிமேகலை, **சீவகசிந்தாமணி,**வளையாபதி, **குண்டலகேசி** என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.
19. இளங்கோவடிகள் **சேர** நாட்டைச் சேர்ந்தவர்.
20. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனப் பாடியவர் **பாரதியார்.**
21. கண்ணகியின் காற்சிலம்பின் பரல்கள் **மாணிக்கம்.**
22. குடும்ப விளக்கு **பாரதிதாசன்** படைப்புகளுள் ஒன்று.
23. கம்பராமாயணம் **ஆறு** காண்டங்களைக் கொண்ட நூல்.
24. சரசுவதி, அந்தாதி **கம்பர்** இயற்றிய நூல்களுள் ஒன்று.
25. கம்பரை புரந்தவர் **சடையப்ப வள்ளல்.**
26. நற்றிணை ஒன்பதடிச் சிற்றெல்லையும் **பன்னிரண்டு அடிப்**பேரெல்லையும் கொண்டது.
27. அரி என்னும் சொல்லின் பொருள் **நெற்கதிர்.**
28. தம்மை அடைக்கலமாகக் கொண்டவரின் துயரை நீக்குவதே **சிறந்த செல்வம்** என நற்றினை குறிப்பிடுகிறது.
29. நல் என்னும் அடைமொழி பெற்ற நூல் **நற்றிணை.**
30. நற்றிணையைத் தொகுப்பித்தவர் **பன்னாடு தந்த மாறன் வழுதி.**
31. நற்றிணை **எட்டுத்தொகை** வகை நூல்களைச் சேர்ந்தது.
32. வெறும் பேச்சுக்கும் **மேடைப்** பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
33. பேச்சு முடிவில் **சுருக்கத்தைக்** கூறிக் கருத்தினை நிலைநாட்டி முடித்தல் வேண்டும்.

UserMedia.blogspot.com

34. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை **பேச்சுக்கலை.**

35. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் **பேரறிஞர் அண்ணா.**

36. சேக்கிழார் பெருமான் அருளியது **பெரியபுராணம்.**

37. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் 'திருநாவுக்கரசர்' எனப் பெயர் வைத்தவர் **அப்பூதி அடிகளார்.**

38. 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' எனப் பாடியவர் **மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்.**

39. பெரியபுராணத்திற்கு சேக்கிழார் இட்ட பெயர் **திருத்தொண்டர் புராணம்.**

40. போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் **அதிவீரராம பாண்டியன்.**

41. நால்வகைப் பாக்களும் வயலுக்கு **வரப்புகளாக** அமைந்துள்ளன.

42. போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் **ஒட்டக்கூத்தன்.**

44. தூது **தொண்ணூற்றாறு** வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

45. "திகழ்பா ஒரு நான்குஞ் செய்யுள் வரம்பாகப் புகழ்பா வினங்கள் மடைப்போக்கா" இப்பாடலடிகளில் செய்யுளின் வரம்புகளாகக் குறிப்பிடுபவை **வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.**

46. இல்லாரை **எல்லாரும்** எள்ளுவர்.

47. அறனீனும் இன்பமும் ஈனும் **திறனறிந்து** தீதின்றி வந்த பொருள்.

48. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர் **மூத்த அறிவுடையார்.**

49. அரியவற்றுள் எல்லாம் அரிது **பெரியார்** பேணித் தமராக் கொளல்.

50. முதலிலார்க்கு **ஊதியம்** இல்லை.

51. திருநாவுக்கரசரின் தமக்கையார் **திலகவதியார்** ஆவார்.

52. திருநாவுக்கரசர் அருளிய பாடல்கள் **தேவாரம்** என வழங்கப்படுகிறது.

53. திருநாவுக்கரசர் காலம் **கி.பி. 7** –ஆம் நூற்றாண்டு.

54. நாமார்க்கும் குடியல்லோம் என்னும் பாடல் **பாரதியாரை** அச்சமில்லை அச்சமில்லை எனப் பாடத் தூண்டியது.

55. சீறாப்புராணத்தை இயற்றியவர் **உமறுப்புலவர்.**

56. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் **சீதக்காதி.**

57. சீறாப்புராணம் **மூன்று** காண்டங்களைக் உடையது.

58. 'கேழல்' என்பதன் பொருள் **பன்றி.**

59. கலித்தொகை **எட்டுத்தொகை** நூல்களில் ஒன்று.

60. நெய்தல்கலியைப் பாடியவர் **நல்லந்துவனார்.**

61. போற்றாரைப் போற்றுதல் என்பது **பொறை** எனப்படும்.

62. கலம்பகம் **96** வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

63. பணை என்னும் சொல்லின் பொருள் **மூங்கில்.**

64. தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் **குடி** போன்றிருந்தேனே.

65. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் **திருவாய்மொழி** குலசேகரர் பாடியதாகும்.

66. பெருமாள் திருமொழியில் **105** பாசுரங்கள் உள்ளன.

67. குலசேகராழ்வார் பாடல் **திருவியற்பா** தொகுப்பில் உள்ளது.

## II. உரிய சொல்லைத் தேர்ந்தெழுதுக

1. மெய்தான் **அரும்பி** (அறும்பி / அரும்பி)
   விதிர் விதிர்த்துன் **விரையார்** (விரையார் / விறையார்) கழற்கு.

2. கைதான் நெகழவிடேன்; இதில் 'நெகிழ' எக்பது **தளர** (துலர /தளர) என்னும் பொருளில் வந்துள்ளது.

UserMedia.blogspot.com

3. உம் பாடப்பகுதியில் வந்துள்ள 'மெய்' என்னும் சொல்லுக்குரிய பொருள் **உடல்.**
(உண்மை / உடல்)

4. இறுவரைக் காணின் **கிழக்காம்** தலை. (கிழக்காம் / கிளக்காம்)

5. மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும் சொல் **உரவோர்**
(உரவோர் / உறவோர்)

6. இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் **பழி** (பளி / பழி)

7. வ**ள**ம் மருவும் (ல/ ள) நி**ழ**ல் (ள/ ழ) தரும் தண்**ணீ**ர்ப் (நீ/ ணீ) பந்தர்
வந்த**ணை**ந்தார் (ணை/ னை)

8. சந்தமு**ற** (ர/ ற) வ**ரை**ந்ததனை (றை/ ரை) எம்ம**ரு**ங்கும் (ரு/ று)
தாங்க**ண்**டார் (ன்/ ண்)

9.அரு**ளொ**டும் (ளொ/லொ) அ**ன்**பொடும்(ண்/ன்) வாரா**ப்** (ரா/றா) பொரு**ளா**க்கம் (லா/ ளா)

10. உ**று**பொருளும் (று/ரு) உ**ல்**கு (ள்/ல்) பொருளு**ந்**தன் (ன்/ந்) ஒ**ன்**னார் (ண்/ன்)

### III. அடி எதுகையை எடுத்தெழுதுக

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்"

**அடி எதுகை :** ந **ன்** றிக்கு எ **ன்** றும்

**சீர் எதுகை :** வ **ரு** க மற்றவள் த **ரு** க ஈங்கென
ந **ற்** றிறம் படராக் கொ **ற்** கை வேந்தே
அ **ள** வில் சனம் – உ **ள** மனைய கு **ள** ம் நிறைந்த – வ **ள** மருவும்
க **ழ** தணைந்த – அ **ழ** பணியா மு **ழ** வில்தம் – வ **ழ** வுடையீர்
நீண்ட வால்நிலம் புடைத்திடக் கிடந்துடல் நிமிர்ந்து
கூண்ட கால்மடித் திருவிழி கொப்பளிப்ப கனல்கள்

**அடி எதுகை:** நீ **ண்** ட, கூ **ண்** ட

### IV. சீர்மோனையை அடிக்கோடிடுக.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

**சீர்மோனை:** ஒ முக்கம் ஒ முக்கம்

1. **க** ள்வனைக் கோறல் **க** டுங்கோ லன்று
   **யா** னோ அரசன் **யா** னே கள்வன்
2. **இ** ந்துவின் நுதலாளோடு **இ** ளவலொ டினிதேறா
3. மன்ற லுன்றிய முகம்மதின் மலரடி வணங்கி

**சீர்மோனை :** **ம** ன்ற, **ம** லரடி

### V. விடுபட்ட சீர்களை எழுதுக.

1 பரிந்தோம்பிக் **காக்க** ஒழுக்கம் **தெரிந்தோம்பிக்**
தேரினும் **அஃதே** துணை

2. ஊக்கம் உடையான் **ஒடுக்கம்** பொருதகர்
தாக்கற்குப் **பேருந்** தகைத்து

3. பாரதிதாசன் தமிழிலக்கிய வானில் **புகழோடு வாழ்ந்தார்**

4. அறனறிந்து **மூத்த** அறிவுடையார் **கேண்மை**
திறனறிந்து **தேர்ந்து** கொளல்

UserMedia.blogspot.com

5. பொருளென்னும் **பொய்யா விளக்கம்** இருளறுக்கும்

எண்ணிய **தேயத்துச் சென்று**

## VI. உவமையைப் பொருளோடு பொருத்தி எழுதுக.

1 "அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று"

| உவமை | | உவமேயம் |
|---|---|---|
| அழுக்காறு உடையான்கண் | – | ஒழுக்கம் இல்லாதவனிடம் |
| ஆக்கம் போன்று இல்லை | – | உயர்வு இருக்காது |

**பொருள்**

பொறாமை உள்ளவனிடம் செல்வம் தங்காதது போல் ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்வு இருக்காது.

2. கொக்கொக்க கூம்பும் பருவத்து

**உவமை :** "கொக்கொக்க கூம்பும் பருவத்து" வாய்ப்பற்ற காலத்தில் அமைதியாகக் காத்திருக்கும் கொக்கைப் போல் இருக்க வேண்டும்

**உவமேயம் :**

"குத்தொக்க சீர்த்த இடத்து" தகுந்த காலம் வாய்த்ததும் கொக்கைப் போல் விரைந்து செய்து முடித்தல் வேண்டும்.

**பொருள் :**

வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப் போல் அமைதியாகக் காத்திருக்க வேண்டும். உரிய காலம் வாய்த்ததும் கொக்கைப் போல் விரைந்து செயல்பட வேண்டும்.

3. "மட அன்னம் கதியது செல"

**உவமை :** "மட அன்னக் கதியது செல"

**பொருள் :** இளம் அன்னம் விரைந்து செல்வது போல

**விளக்கம் :**

இராமன் கட்டளையின்படி குகன் கங்கையாற்றினில் விரைவாகப் படகினைச் செலுத்தினான். மடங்கி விழும் அலைகளையுடைய கங்கையாற்றில் இளமையான அன்னம் விரைந்து செல்வதைப்போல அந்தக் காட்சி இருந்தது என கம்பர் உவமை நயம் விளங்க எடுத்துரைத்துள்ளார்.

இளமையான அன்னம் படகிற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

4. எழிலிரு புயமும் குன்று போலுற வீங்கின

**உவமை** : குன்று

**உவமேயம்** : நபிகள் நாயகத்தின் எழில் மிகுந்த இரு புயங்கள்

**உவம உருபு** : போல

**விளக்கம் :** நபிகள் நாயகத்தின், எழில் மிகுந்த இரு தோள்களும் மலைகளைப் போல பொருந்தும்படி இருந்தன.

## VII. சீர்பிரித்து எழுதுக

1. ஒழுக்கமுடைமை குடிமை இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும்

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்

இழிந்த பிறப்பாய் விடும்.

UserMedia.blogspot.com

2. காலங்கருதியிருப்பர் கலங்காது ஞாலங்கருதுபவர்

காலம் கருதி இருப்பர் கலங்காது

ஞாலம் கருது பவர்.

## VIII. பொருத்துக

| | வினா | | விடை | |
|---|---|---|---|---|
| | **சொல்** | **- பொருள்** | **சொல்** | **- பொருள்** |
| 1. | விரை | - உடல் | விரை | - மணம் |
| | கழல் | - பெருகி | கழல் | - அணிகலன் |
| | ததும்பி | - மணம் | ததும்பி | - பெருகி |
| | மெய் | - அணிகலன் | மெய் | - உடல் |
| 2. | அறத்துப்பால் | - 25 அதிகாரங்கள் | அறத்துப்பால் | - 38 அதிகாரங்கள் |
| | பொருட்பால் | - 38 அதிகாரங்கள் | பொருட்பால் | - 70 அதிகாரங்கள் |
| | இன்பத்துப்பால் | - 70 அதிகாரங்கள் | இன்பத்துப்பால் | - 25 அதிகாரங்கள் |
| | | - 50 அதிகாரங்கள் | | |
| | **காண்டம்** | **- காதைகள்** | **காண்டம்** | **- காதைகள்** |
| 3. | புகார்க்காண்டம் | - 13 காதைகள் | புகார்க்காண்டம் | 10 காதைகள் |
| | மதுரைக்காண்டம் | - 7 காதைகள் | மதுரைக்காண்டம் | 13 காதைகள் |
| | வஞ்சிக் காண்டம் | - 10 காதைகள் | வஞ்சிக் காண்டம் | - 7 காதைகள் |
| | | -15 காதைகள் | | |
| 4. | இடர் | - நிலவு | இடர் | - துன்பம் |
| | நாவாய் | - துன்பம் | நாவாய் | - படகு |
| | இறை | - படகு | இறை | - தலைவன் |
| | இந்து | - தலைவன் | இந்து | - நிலவு |
| 5. | செறு | - பனையோலைப்பெட்டி | செறு | - வயல் |
| | வித்து | - புதுவருவாய் | வித்து | - விதை |
| | யாணர் | - விதை | யாணர் | - புதுவருவாய் |
| | வட்டி | - வயல் | வட்டி | - பனையோலைப்பெட்டி |
| 6. | மேதி | - சிவன் | மேதி | - எருமை |
| | சுந்தரம் | - எருமை | சந்தம் | - அழகு |
| | கோதில் | - அழகு | கோதில் | - குற்றமில்லாத |
| | அங்கணர் | - குற்றிமில்லாத | அங்கணர் | - சிவன் |
| | | - பசு | | |
| 7. | கான் | - கரடி | கான் | - காடு |
| | உழுவை | - சிங்கம் | உழுவை | - புலி |
| | மடங்கல் | - புலி | மடங்கல் | - சிங்கம் |
| | எண்கு | - காடு | எண்கு | - கரடி |
| 8. | பண்பு | - கூறியது மறா அமை | பண்பு | - பாடறிந்து ஒழுகுதல் |
| | அன்பு | - பேதையார் சொல் நோன்றல் | அன்பு | -தன்கிளை செறாஅமை |
| | அறிவு | - தன்கிளை செறா அமை | அறிவு | - பேதையார் சொல் நோன்றல் |
| | செறிவு | - பாடறிந்து ஒழுகுதல் | செறிவு | - கூறியது மறா அமை |

## IX. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.

1. நூல் (ல் /ள்) நோக்கி, வாழ் (ழ் /ல்) வான், நுனித்து (னி /ணி)

UserMedia.blogspot.com

2. வாழ்தல் (ல்/ழ்) வேண்டி (ண் /ன்) ஊழ்வினை துரப்ப (ற/ர)

3. தாழ்ந்த (ள்/ழ்) குடையன் தளர்ந்த (ன்/ந்) செங்கோலன் (ள/ல)

4. இருந்த (ன் /ந்) வள்ளலைக் (ல்/ள்) காண வந் (ன/ண) தெய்தினான் (ண்/ன்)

5. இடருற (ர/ற) மறையோரும் (ரை/றை) எரியுறு (ரி/றி) மெழுகானார் (ழு/ளு)

**X. அகரமுதலி பார்த்துப் பொருள் எழுதுக**

இறை – கடவுள், தலைவன், அரசன், உயர்ந்தோன்
மூத்தோன், நிலவரி, நீதி

நாவாய் – மரக்கலம், நெய்தல் நிலப்பாறை, படகு

**XI. யார், யாரிடம் கூறிய தொடர் இது?**

1. வென்றி வாளரசே ..............

**வந்த மனிதன் முகம்மது நபியிடம் கூறியது.**

2. வேறொரு காட்டினிற் புகுக ..............

**முகம்மது நபி புலியினிடம் கூறியது.**

# உரைநடை

ஒரு மதிப்பெண் வினாவிடை.

1. தமிழர் மனித வாழ்வை **அகம், புறம்** எனப் பிரித்தனர்.
2. குமரிக் கண்டத்தில் பிறந்த முதல் மனிதன் பேசிய மொழி **தமிழ்மொழி.**

3.2004 ஆம் ஆண்டு **அக்டோபர்** திங்களில் தமிழ்மொழியைச் செம்மொழியாக நடுவணரசு அறிவித்தது.

4.தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் **மாக்ஸ்முல்லர்** ஆவார்.

5.பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர் **பாவாணர்.**

6. இன்றைய மதுரையில் **மூன்றாம்** தமிழ்ச் சங்கம் இருந்தது.

7. சீனமொழி **சித்திர** எழுத்து முறையில் அமைந்தது.

8.சிங்கப்பூரிலும் இலங்கையிலும் ஆட்சிமொழிகளில் ஒன்றாகத் **தமிழ்** இடம்பெற்றுள்ளது.

9. பாரதிதாசனார் **புரட்சிக் கவிஞர்** என அழைக்கப்படுகிறார்.

10. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள **பெருநோய்** ஒன்று உண்டு.

11. பெரியார் சமூக **முரண்களை** எதிர்த்தவர்; மூடக்கருத்துகளை **முட்டறுத்தவர்.**

12.அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர் **பெரியார்**.

13.பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று **சொத்துரிமை இல்லாமை.**

14.மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் **பொருளியல்** பேராசிரியராகப் பணியாற்றினார்.

15. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது **பாரதரத்னா**.

16.நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் **இயக்குநர்** என அழைப்பார்.

17. படப்பிடிப்புக் கருவியை **நகர்த்தும் வண்டியில்** பொருத்துவதும் உண்டு.

UserMedia.blogspot.com

18. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு **வேடிக்கையாக** இருக்கும்.
19. இலெமூரியாவை **மனித** நாகரிக தொட்டில் என்பர்.
20. தனக்குவமையில்லா ஒரு **தனி இனம்** தமிழ் இனம்.
21. பண்ணொடு தமிழொப்பாய் எனத் தொடங்கும் பாடல் இடம்பெறும் நூல் **தேவாரம்.**
22. உலகம் என்ற தமிழ்ச்சொல் **உலவு** என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது.
23. தமிழர்கள் நிலத்தை **ஐந்தாக** பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
24. காந்தியடிகள் **சிரவண பிதுர்பத்தி** என்னும் நாடக நூலைப் படித்தார்.
25. திருக்குறளை மொழிபெயர்த்த உருசிய அறிஞர் **தால்சுதாய்.**
26. காந்தியடிகள் **அரிச்சந்திரன்** நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.
27. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல் **பைபிள்.**
28. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை **எளிமை, சிக்கனம்.**
29. காந்தியடிகளின் மனங்கவர்ந்த குஜராத்திப் பாடலின் கருத்து **இன்னா செய்யாமை.**
30. இராமலிங்கர் சத்திய தருமச் சாலையை நிறுவிய இடம் **வடலூர்.**
31. இராமலிங்கர் தமிழ் மொழியே **இறவாத நிலை** தரும் என்று கருதினார்.
32. உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் **பெரியபுராணம்.**
33. வள்ளலாரின் இயற்பெயர் **இராமலிங்கர்.**
34. வள்ளலாரை புதுநெறி கண்ட புலவர் என்று போற்றியவர் **பாரதியார்.**
35. சங்க காலத்தில் பெண்கள் **கடல்** கடந்து செல்லக் கூடாது.
36. நாள்தோறும் கல்வியில் **புதுப்புதுத் துறைகள்** உருவாகிக் கொண்டு இருக்கின்றன.
37. காவலர், இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் **எழுத்துத்** தேர்வும் உண்டு.
38. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படைத் தகுதி **பன்னிரண்டாம் வகுப்பு.**
39. விரல்கள் பத்தும் மூலதனம் என்னும் பாடலின் ஆசிரியர் **தாராபாரதி.**

## II. ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. இப்போது அவர் கையில் கோப்புகள் இருந்தது.
   இப்போது அவர் கையில் கோப்புகள் **இருந்தன.**
2. வயது வந்தோர்க்கும், பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது.
   வயது வந்தோர்க்கும், பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் **புகழ்ந்தன.**
3. ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் கண்டுபிடித்தனர்.
   ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் தயாரிக்கும் முறையைக் **கண்டுபிடித்தார்.**
4. இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.
   இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் **பார்க்கின்றனர்.**
5. காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிகப் பொருள்கள் மண்டிக்கிடந்தது.
   காவிரிப்பூம்பட்டினத்தில் வாணிகப் பொருள்கள் **மண்டிக்கிடந்தன.**
6. தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன.
   தமிழர்களின் வாழ்வில் இசை சிறந்த இடத்தைப் **பெற்றிருந்தது.**

UserMedia.blogspot.com

7. ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.
ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் **கொண்டிருந்தாள்.**

8. மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் போதா.
மனிதனின் நோக்கம் உயர்வானதாகவும், தூய்மையானதாகவும் இருந்தால் மட்டும் **போதாது.**

9. பெண்கள் எல்லாத் துறையிலும் பணிபுரிகின்றாள்.
பெண்கள் எல்லாத் துறையிலும் **பணிபுரிகின்றனர்.**

10. தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் உள்ளது.
தமிழகத்தில் எண்ணற்ற தொழில்நுட்பப் பயிலகங்கள் **உள்ளன.**

11. படித்து முடித்தவருக்கு அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புகள் உள்ளது.
படித்து முடித்தவர்களுக்கு அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புகள் **உள்ளன.**

12. கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் பணிந்தார்கள்.
கல்வி நலம் பெற்ற பெண்பாற் புலவர்க்கு மன்னரும் **பணிந்தனர்.**

13. பெண்கள் பெறவேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.
பெண்கள் **பெறவேண்டியன** பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

14. புலவர்கள் பொங்கற் புதுநாளில் மாண்பினை உணர்ந்து கொண்டாடினார்.
புலவர்கள் பொங்கற் **புதுநாளின்** மாண்பினை உணர்ந்து கொண்டாடினார்.

15. மேடைப்பேச்சுக்கு கருத்துகளே உயிர் நாடி போன்றது.
மேடைப்பேச்சுக்கு கருத்துகளே உயிர் நாடி **போன்றவை.**

16. அவன் கவிஞன் அல்ல.
அவன் கவிஞன் அன்று.
அவன் கவிஞன் **அல்லன்.**

17. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக்கருவி என்ற கருவி பயன்படுகின்றன.
திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக்கருவி என்ற கருவி **பயன்படுகின்றது.**

18. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின்விளக்குகள் போல் இருக்கின்றது.
நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில்நுட்பமும் ஆங்காங்கு ஒளிபரப்பும் மின்விளக்குள் போல் **இருக்கின்றன.**

19. இன்று பேருந்துகள் ஓடாது.
இன்று பேருந்துகள் **ஓடா.**

20. ஓர் அணில் மரத்தில் ஏறின.
ஓர் அணில் மரத்தில் **ஏறியது.**

21. நான் வாங்கிய நூல் இது அல்ல.
நான் வாங்கிய நூல் இஃது **அன்று.**

## III. சந்திப்பிழை நீக்கி எழுதுக

1. ஆசிரியர் பெயரை தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்.
ஆசிரியர் பெயரைத் தம் பெயருடன் சேர்த்து பீமாராவ் அம்பேத்கராக மாறினார்.

UserMedia.blogspot.com

2. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.
ஏழைகளுக்குப் பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்றுத் தந்தார்.
3. திரைபடம் எடுக்க பயன்படும் படசுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
திரைப்படம் எடுக்கப் பயன்படும் படச்சுருள் செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
4. திரைபடம் மக்களை தன்பால் ஈர்த்து கட்டி போடவல்லது.
திரைப்படம் மக்களை தன்பால் ஈர்த்துக் கட்டிப் போடவல்லது.
5. மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது.
மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது.
6. தமிழில் வரலாற்று கருத்துகளையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்.
தமிழில் வரலாற்றுக் கருத்துகளையும், பண்பாட்டுக் கூறுகளையும் காண முடியும்.
7. வள்ளலார் அருளிய வழிகளை கடைபிடித்து ஒழுகினால் மனித நேயம் மலரும்.
வள்ளலார் அருளிய வழிகளைக் கடைப்பிடித்து ஒழுகினால் மனித நேயம் மலரும்.
8. அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசன புதுமையை புகுத்தினார்.
அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசனப் புதுமையைப் புகுத்தினார்.
9. கைதொழில் ஒன்றை கற்று கொள்.
கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்.
10. பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும் கடல் கடந்து செல்ல கூடாதெனவும் கூறி வந்தனர்.
பெண்கள் குடும்பத்தைப் பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்துச் செல்லக் கூடாதெனவும் கூறி வந்தனர்.
11.அனைத்து ஆண்களை போலவே பெண்களுக்கும் அரசு பணி கொடுக்க வேண்டும்.
அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அரசுப் பணி கொடுக்க வேண்டும்.
12. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கைப் பயணமாம்.
13.உரிமைக்குரல் கொடுத்த நல்லோர்களைதான் நாம் சீர்திருத்தச் செம்மல்கள் எனச் சிந்தை மகிழ பாராட்டுகிறோம்.
14. மேடைப்பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.
15. மக்களை இலட்சிய பார்வையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையதே மேடைப்பேச்சு.

**IV. ஏற்ற வினாத் தொடர்கள் அமைத்து எழுதுக**

1. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
**பெரியார் எதை விரும்பினார்?**
2. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.
**பெரியார் எவற்றை ஏற்க மறுத்தார்?**
3. செய்திப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்
**எவற்றின் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்?**
4. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.
**ஒளி, ஒலிப் படக்கருவி எதற்குப் பயன்படுகிறது?**

UserMedia.blogspot.com

5. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

**தமிழர்கள் எந்தெந்த நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டு இருந்தார்கள்?**

**(அல்லது)**

**தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் எவ்விதத் தொடர்பு கொண்டிருந்தனர்?**

4. காந்தியடிகள் பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.

**காந்தியடிகள் கதரை எவ்வாறு கருதினார்?**

5. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப் பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.

**கல்வி எவ்வாறு அமைதல் வேண்டும்?**

6. இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.

**பட்டதாரி ஆசிரியர் பணியில் சேர்வதற்கான தகுதி என்ன?**

7. தொழில்நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன.

**எங்கு பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன?**

8. திரைப்படம் எடுப்பதனை விடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்

**செய்திப்படம் எடுப்பதனை விட வேறு எது கடினமான பணியாகும்?**

9. நடிப்புக் கலையையும் அரசியலையும் தம் இருகண்களாக எம்.ஜி.இராமச்சந்திரன் கருதினார்

**எவற்றை தம் இரு கண்களாக எம்.ஜி.இராமச்சந்திரன் கருதினார்?**

## V. தேவையான இடங்களில் நிறுத்தக் குறியிடுக

1. கதைப்படங்கள் மட்டுமின்றிக் கருத்துப்படங்கள் செய்திப்படங்கள் விளக்கப்படங்கள் கல்விப் படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது

கதைப்படங்கள் மட்டுமின்றிக் கருத்துப்படங்கள், செய்திப்படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

2. மண் என்றால் நிலம் என்பது பொருள் தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐவகைகளாகப் பிரித்தார்கள்

மண் என்றால் நிலம் என்பது பொருள். தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைகளாகப் பிரித்தார்கள்.

3. தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன

தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.

4. சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்

சட்டத்தை மதிப்போம் ; குற்றம் களைந்த வாழ்க்கை வாழ்வோம்; சட்டம் நம்மைக் காக்கும்.

UserMedia.blogspot.com

**VI. அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள வினைப்பகுதியை எச்சமாக்குக.**

1. நன்றாகப் **பசித்தப்** (பசி) பின்னர் அளவுடன் உண்ண வேண்டும்.
2. தமிழர் நிலத்தினை ஐவகையாகப் **பிரித்து** (பிரி) வாழ்ந்திருக்கிறார்கள்.

**VII. பொருத்துக**

1. ஈஸ்ட்மன் – ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி
எடிசன் – படச்சுருள்
எட்வர்டு மைபிரிட்சு – கருத்துப்படம்
வால்ட் டிஸ்னி – இயக்கப்படம்
**ஈஸ்ட்மன் - படச்சுருள்**
**எடிசன் - ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி**
**எட்வர்டு மைபிரிட்சு - இயக்கப்படம்**
**வால்ட் டிஸ்னி - கருத்துப்படம்**

2. சத்திய சோதனை – திருவள்ளுவர்
பகவத்கீதை – கிறித்துவச் சமயநூல்
திருக்குறள் – காந்தியடிகள்
பைபிள் – இந்து சமயநூல்
**சத்திய சோதனை - காந்தியடிகள்**
**பகவத்கீதை - இந்து சமயநூல்**
**திருக்குறள் - திருவள்ளுவர்**
**பைபிள் - கிறித்துவச் சமயநூல்**

3. வினையே ஆடவர்க்குயிர் – தாராபாரதி
முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை – குறுந்தொகை
உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே – தொல்காப்பியர்
விரல்கள் பத்தும் மூலதனம் – திருமூலர்
**வினையே ஆடவர்க்குயிர் – குறுந்தொகை**
**முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை – தொல்காப்பியர்**
**உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே – திருமூலர்**
**விரல்கள் பத்தும் மூலதனம் – தாராபாரதி**

**VIII. தொடர்களின் வகையைக் குறிப்பிடுக.**

1. காந்தியடிகள் அரிச்சந்திர நாடகத்தை ஒரு முறை பார்த்தார்.
**செய்தி வாக்கியம்**
2. இப்படிச் செய்வது ஏய்த்துப் பிழைக்கும் செயலல்லவா?
**உணர்ச்சி வாக்கியம்**

செய்யுள் குறுவினாக்கள் ( 2 மதிப்பெண்கள்)

1. உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?
   - உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்
   - அது அனைத்து சிறப்புகளையும் தரவல்லது
2. ஒழுக்கம் எய்துவது எது? இழுக்கத்தினால் எய்துவது எது?
   - ஒழுக்கத்தினால் எய்துவது உயர்வு.
   - இழுக்கத்தினால் எய்துவது பெரும்பழி
3. நன்றிக்கு வித்தாவது எது?
   - நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கம்
   - நல்லொழுக்கம் ஒருவருற்கு மிகுந்த சிறப்பைத் தரும்
4. என்றும் இடும்பை தருவது எது?
என்றும் இழும்பை தருவது தீயொழுக்கம்
அது பெரும் பழியை அடையச் செய்யும்

UserMedia.blogspot.com

5. பலகற்றும் கல்லார் அறிவிலார் - யார்?
உலகில் வாழும் நல்லவர்களோடு பொருந்தி வாழத் தெரியாதவர்கள்
பல கற்றும் கல்லாதாவர் ஆவார்.

6. கூகையும் காக்கையும் காரணம் காட்டி வள்ளுவர் விளக்குவது யாது?
காக்கை பகலில் கூகையை வெல்லும்
அதுபோல, அரசர் தன்னைவிட வலிமையானவரை, காலமறிந்து வெல்ல வேண்டும்

7. ஞாலம் கருதினும் கைகூடும் எப்போது?
( அல்லது)
ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வர்?

- காலமும் இடமும் அறிந்து செயல்பட வேண்டும்
- அப்போது உலகத்தை ஆளக் கருதினாலும் கைகூடும்

8. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?
- ஊக்கமுடையான் அடங்கி இருப்பது
- ஆட்டுகடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்குவது போன்றதாகும்

9. செயற்கரிய செயல் செய்வது எப்போது?
- ஏற்ற காலம் வரும்போதே
- அரிய செயல்களைச் செய்து முடிக்க வேண்டும்

10. கொக்கைச் சான்று காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?
( அல்லது)
காலமறிந்து செயல்படுவது எவ்வாறு?
- இரைக்காக கொக்கு காத்திருப்பது போல் காத்திருக்க வேண்டும்
- வாய்ப்பு கிடைத்தவுடன் விரைந்து செயலை முடிக்க வேண்டும்

11. திருவள்ளுவர் வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
- முதற்பாவலர்
- தெய்வப் புலவர்
- செந்நாப் போதார்
- பெரு நாவலர்
- பொய்யில் புலவர்

12. பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?
- “வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே” எனப் புகழ்ந்துள்ளார்.

13. கையுறைப் பொருட்களாக குகன் கொண்டு சென்றவை எவை?
- குகன் கையுரைப் பொருட்களாக தேனையும் மீனையும் கொண்டு சென்றான்
- இராமனுக்காக

14. குகன் இலக்குவனிடம் கூறியது யாது?
- “ தேவனே! தங்கள் திருவடிகளை வணங்க வந்தேன்”
- “ நான் நாய் போல் தொண்டு செய்வேன” என்றான்

15. குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்தான்?
- கரிய தலைமுடி மண்ணில் படிய வணங்கினான்
- எழுந்து அடக்கமாய் வாய்பொத்தி வளைந்து நின்றான்

16. குகனின் வேண்டுகோள் யாது?
- குகனின் மனம் ஊருக்குச் செல்ல இயலவில்லை

UserMedia.blogspot.com

- அதனால் தன்னால் இயன்ற தொண்டினைச் செய்து இராமனுடன் இருக்க அனுமதி வேண்டினான்

17. இளையோன் குறுகி நீ ஆவான் யார்? – யார் யாரிடம் கூறியது?
    - கம்பராமாயணத்தில் குகப் படலத்தில் இலக்குவன் குகனிடம் கூறியது.
18. அன்புள இனிநாம் ஓர் ஐவர்கள் உளரானோம் - யார் யாரிடம் கூறியது?
    - கம்பராமாயணத்தில் குகப் படலத்தில் இராமன் குகனிடம் கூறியது.
19. சிலம்பு உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?
    - அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
    - உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
    - ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்
20. ஐம்பெருங் காப்பியங்கள் எவை? எவை?
    - சிலப்பதிகாரம்
    - மணிமேகலை
    - சீவகசிந்தாமணி
    - வளையாபதி
    - குண்டலகேசி
21. பாவேந்தர் பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?
    - கனக சுப்பு ரத்தினம்
22. அப்பூதியடிகளார் எத்தகைய பண்பாளர்?
    - களவு,பொய், காமம், சினம் முதலிய குற்றங்கள் நீங்கியவர்
    - சிவபக்தி உடையவர்
    - திருநாவுக்கரசரிடம் பேரன்பு உடையவர்
23. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?
    - நீர் வைத்த தண்ணீர் பந்தலில் உன் பெயர் எழுதாமல் வேறொருவர் பெயர் எழுதி வைத்தமைக்கு காரணம் என்ன?
24. "நும்போர் எழுதாதே வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்? " யார் யாரிடம் கூறியது
    - பெரிய புராணத்தில் திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியது.
25. " இப்போது இங்கு அவன் உதவான் " யார் யாரிடம் கூறியது?
    - பெரியபுராணத்தில் அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் கூறியது.
26. வன்மையுள் எல்லாந் தலையாவது எது?
    - அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய்க் கொண்டு அவர் வழியில் நடத்தலே சிறந்த வலிமை
27. செற்றார் செயக்கிடந்ததில்லை – யாருக்கு?
    - அறிவில் சிறந்தோரைச சார்ந்து நடப்பவர்க்கு
    - பகைவரால் தீங்கு ஏற்படாது
28. நல்லார் தொடர்பைக் கைவிடல் எத்தன்மைத்து?
    - பலரோடு பகைத்துக் கொள்வதைவிட பல மடங்கு தீமையைத் தரும்
29. பொருளல்லவரைப் பொருளாகச் செல்வது எது?
    - மதிக்கத்தகாதவரையும் மதிக்கச் செய்வது பொருள் ஆகும்
30. வேந்தற்குரிய பொருள்கள் எவை?
    - அரசுரிமையால் வந்த பொருள்
    - மக்கள் வரியாகத் தந்த பொருள்
    - பகைவரை வென்று சேர்த்த பொருள்

UserMedia.blogspot.com

31. தேவராம் - பொருள் எழுதுக

- தே + வாரம் - தெய்வத்தன்மையுடைய இசைப்பாடல்
- தே + ஆரம் - தெய்வத்திற்குச் சூடப்படும் பூமாலை

32. சிவபெருமான் எத்தன்மையன்

- எவருக்கும் அடிமையாககாத தன்மையன்
- ஒரு காதில் சங்கினாலான குண்டலத்தை அணிந்தவன்

33. ஆற்றுதல் என்பது யாது?

- வறுமையில் வாடுபவர்களுக்கு பொருள் கொடுத்து உதவுதல்

34. பண்பு என்படுவது யாது?

- உலக நிலை அறிந்து சான்றோர் வழி நடத்தல்

35. அறிவு எனப்படுவது யாது?

- ஆறிவற்றவர் கூறும் சொற்களைப் பொறுத்துக் கொள்ளதல்

36. நந்திக்கலம்பக உறுப்புகள் நான்கினைக் கூறுக?

- அம்மானை
- ஊசல்
- மறம்
- தவம்

37. நந்திக்கலம்பகம் யார் மீது பாடப்பெற்றது,

- பல்லவ மன்னன் மூன்றாம் நந்தி வர்மன் மீது பாடப்பட்டது

38. நந்திவர்மன் வீரம் எத்தகையது?

- நந்திவர்மன் எதிர்க்கும் அறிவற்ற மன்னர்கள்
- தம் உயிரை இழுந்து தேவர் உலகத்தை ஆள்வர்

39. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?

- நாலாயிர திவ்விய பிரபந்தம்

40. குல சேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர்?

- வடமொழி
- தென்மொழி

**உரைநடை – குறுவினாக்கள் ( 2 மதிப்பெண்கள்)**

1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?

- உலகில் உள்ள மொழிகள் ஆறாயிரம்
- இலக்கண இலக்கிய வளமுடையவை மூவாயிரம்

2. தமிழ் மொழி குறித்து டாக்டர் எமினோ கூறுவது யாது?

- இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகிறது.

UserMedia.blogspot.com

3. தமிழ் மொழியின் தனித் தன்மைகளை ஏழுதுக.

- இயல் இசை நாடகம் எனும் முப்பிரிவுகளைக் கொண்டது
- இலக்கண இலக்கிய வளம் உடையது
- தன்கென தனிநொக்கும் போக்கும் கொண்டது

4. மொழி மாற்றம் என்றால் என்ன?

- ஒரு மொழிப் படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைக்கும் முறையாகும்

5. கல்விப் படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை?

- பல்வகை விலங்குகளின் வாழ்க்கை , பன்னாட்டு மக்களின் வாழ்க்கை
- நேரில் காண முடியாத பல இடங்களட ஆகியவற்றை கண்டு அறியலாம்

6. செய்திப் படங்கள் மூலமாக நாம் அறிவன யாவை?

- ஊலகில் பல்வேறு பகுதிகளில் நடக்கம் நிகழ்சிகளை இருக்கும் இடத்திலிருந்து கண்டு அறியலாம்

7. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?

- மலை - குமரிமலை
- ஆறு - ப றுளி ஆறு

8. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

- பட்டினப்பாலை
- மதுரைக்காஞ்சி

9. ஞாலம் - பெயர் காரணம் கூறு

- ஞால் என்பதற்குத் தொங்குதல் என்று பெயர்
- எதனையும் பற்றிக் கொண்டில்லாது , தனியெ உலகம் தொங்கி கொண்டிருப்பதை குறிக்கும்

10. நோய் வருவதற்கான காரணங்கள் பற்றி வள்ளுவர் கூறுவது என்ன?

- உடலினுள் வாதம் , பித்தம் , சிலேத்துமம் ஆகிய மூன்றில் ஏதேனும் ஒன்று குறைந்தால் நோய் வரும்

11. அமெரிக்க இதழாசிரியர் காந்தியடிகள் பற்றிக் கூறியது யாது?

- காந்தியடிகளின் சத்திய சோதனையில்தான் உலகம் உய்ய வழி இருக்கிறது என்றார்

UserMedia.blogspot.com

12. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத்திப் பாடலின் கருத்து யாது?

- தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை
- தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்
- அதில் உண்மைப் பொருண்மை உண்டு

13. இயேசுவின் மலைப்பொழிவு நூலைப் படித்துக் காந்தியடிகள் உணர்ந்தது என்ன?

- தீயவனை எதிர்க்காதே அவனிடம் உள்ள தீமையை எதிர்த்து நில்
- பகைவனிடம் அன்பு பாராட்ட வேண்டும்

14. காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை?

- அன்பு
- உண்மை
- உறுதி
- இன்னா செய்யாமை

15. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை,

- கதர் இயக்கம்
- மது விலக்க
- தீண்டாமை ஒழிப்பு

16. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?

- விலை மதிப்புள்ள அணிகலன்களை அணிந்து கொண்டு பகட்டாய் வாழ்வது பாவம் என்கிறார்

17. எவற்றை அறநெறியாகப் போற்ற வேண்டும் என்று காந்தியடிகள் கூறுனார்?

- உண்மை பேசுதல்
- பகைவனிடம் அன்பு பாராட்டுதல்
- எளிமை
- சிக்கனம்

18. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?

- இந்தியாவின் வாழ்வு இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வு என்றார்

19. இராமலிங்கர் எங்கு எப்போது பிறந்தார்?

- சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூர்
- நாள் 5.10.1823

UserMedia.blogspot.com

20. வள்ளலாரின் முழக்கம் யாது?

- அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை
- உயிரிரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்

21. சத்திய தருமசாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?

- சாதி மத வேறுபாடு இன்றி பசித்தோர்கெல்லாம உணவிட்டார்

22. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறதல் வேண்டும்?

- மேல்நிலைக் கல்வித் தகுதி
- அதுவே அடிப்படைக் கல்வித் தகுதி ஆகும்

23. வேலை வாய்ப்பினை உருவாக்கித் தரும் அமுதசுரபியாக விளங்குபவை யாவை?

- தொழிற் கல்வி
- தொழில் நுட்பக்கல்வி
- கலை அறிவியல் கல்வி
- சிறுதொழில் துறைக் கல்வி

24. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை?

- ஊயிர் தொழில் நுட்பத்துறை
- நுண்ணியல் தொழில் நுட்பத்துறை

25. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கினை எழுதுக?

- பி. ஏ - தமிழ் இளங்கலை
- பி.எஸ்.ஸி - கணிதம் இளம் அறிவியல்
- பி.காம் - இளம் வணிகவியல்
- பி.எட் - இளம் கல்வியல்

26.இடைநிலை ஆசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

- மேல்நிலை கல்வியல் ( +2) தோர்ச்சி பெற்றவர்கள்
- இடைநிலை ஆசிரியர் கல்விப் பயிற்சியில் இரண்டாண்டுகள் படித்துத் தேர்ச்சிப் பெற்றால்
- இடைநிலை ஆசிரியர் ஆகலாம்

UserMedia.blogspot.com

## செய்யுள் : சிறு வினாக்கள்

1. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாற வாழ்த்தினான்?
    - கொற்கை துறைமுகத்தின் தலைவனே வாழ்க!
    - பொதிகை மலையின் தலைவனே வாழ்க!
    - பழிச்சொல் சேராத பஞ்சவனே வாழ்க!
2. கண்ணகி குறித்து வாயில் காவலன் கூறியவற்றை எழுதுக?
    - அவள் கொற்றவையோ பிடாரியோ , பத்திரகாளியோ அல்ல
    - தாருகனைக் கொன்ற துர்க்கையும் அல்ல
    - தீராத கோபம் கொண்டு கையில் சிலம்பேந்தியுள்ளாள்
    - கணவனை இழந்தவள்
3. சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?
    - அடைக்கலமாக வந்த புறாவுக்காகத் தன் உடலையே தந்தான் சிபிசக்கரவர்த்தி
    - பசுவின் துயரைத் துடைக்க , தன் மகனை தேர்காலில் இட்டான் மனுநீதி சோழன்
4. கண்ணகிக்குப் பாண்டியன் நெருஞ்செழியன் கூறிய மறுமொழி யாது?
    - “ கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று, அது அரச நீதி என்றான்
    - “கண்ணகி” என் சிலம்பில் உள்ளது மாணிக்கப்பரல்கள் என்றாள்
    - “மன்னன்” எம் சிலம்பில் உள்ளது முத்துக்கள் என்றான்
    - உண்மை அறிந்து , என் வாழ்நாள் அழியட்டும் என்ற வீழ்ந்தான்
5. தமிழ்மொழி வளர்ச்சியடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிமுறைகள் யாவை?
    - எளிய நடையில் , தற்காலத்திற்கு ஏற்றவாறு
    - புதிய இலக்கண நூல்களை எழுதுதல் வேண்டும்
    - இலவச நூல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும்
6. செந்தமிழ் செழுந்தமிழாயச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?
    - புதிய ஆய்வுச் சிந்தனைகளை விளக்க
    - புதிய பெயர்களையும் விளக்கமான படங்களுடன் சிறந்த நூல்களையும் எழுதுதல் வேண்டும்
7. தமிழுன் எகற்கு நாண வேண்டும்?
    - வறுமைக்காரணமாக ஒரு தமிழன் கல்வி கற்கவில்லை என்றால்
    - இங்குள்ள தமிழர் எல்லோரும் நாண வேண்டும்
8. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழி தொகுத்து எழுதுக.
    - அரசனால் பாராட்டப்படுவது செல்வம் அன்று
    - யானை , தேர், குதிரை ஆகியவ்றில் செல்வதும் செல்வம் அன்ற
    - அடைக்கலமாய் வந்தவர்களைக் காப்பாற்றுவதே செல்வம் என்றாள்

UserMedia.blogspot.com

9. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

- பொன், முத்து, பவளம் , மாணிக்கம் ஆகியவை வேறு வேற இடங்களில் பிறக்கும்
- அவை மாலையாக கோர்க்கும் போது ஒன்று சேரும்
- அதுபோலச் சான்றோர் ஒன்றாகச் சேர்வர்

10. வயலின் வரப்புகளாக கூறப்படுபவை யாவை?

- நான்கு பக்கமும் நான்கு பாக்கள் வரப்புகளாக உள்ளன
- அவை வெண்பா , ஆசிரியப்பா , கலிப்பா , வஞ்சிப்பா

11. வயல் தரும் விளைகள் யாவை?

- வயலில் விளையும் விளைபொருட்கள் நான்கு
- அவை , அறம் , பொருள் , இன்பம் , வீடு

12. போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

- தலையில் குட்டுபவர் - அதிவீரராம பாண்டியன்
- செவியை அறுப்பவர் - வில்லிப்புத்தூரார்
- தலைமை வெட்டுபவர் - ஒட்டக் கூத்தர்

13. கலித்தொகை – குறிப்பொழுதுக

- எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகை , கலிப்பாவால் பாடப்பட்டது, நூற்றைம்பது பாடல்களைக் கொண்டது
- குறிஞ்சி, முல்லை , மருதம் , நெய்தல் , பாலை என்ற பிரிவுகளை உடையது
- சங்ககாலப் புலவர் நலந்துவனாரால் பாடப்பட்டது

14. நந்திவர்மன் பெருமைகளாக நந்திக் கலம்பம் கூறவன யாவை?

- முத்துகளைக் கொடுத்து நெற்கதிரைக் கொண்டுவரும் காவிரி நாட்டின் தலைவன்
- செல்வக்குடையும் பூமிதேவியின் உரிமையும் பெற்றவன்
- நந்திவர்மனை வணங்காத அரசர்கள் நானுலகைத்தான் ஆட்சி செய்வார்கள்

15. குலசேக ஆழ்வார் திருவித்துவக் கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது?

- இறவைா! நீ எமக்கு அருள் புரியவில்லை என்றால் , எனக்கு வேற பற்ற இல்லை
- மன்னன் துன்பம் செய்தாலும் மக்கள் அவனையே நம்புவர்
- அதுபோல நானும் உன்னையே நம்புகிறேன்.

## 4 மதிப்பெண் வினா – விடைகள்

1. பெண்கல்வி குறித்துப் பொரியார் கூறும் கருத்துகள் யாவை?

- பெண்களின் உரிமையான கல்வி சமூக மாற்றத்திற்கு முக்கியம்
- அவர்களுக்கு உலகப் படிப்பையும் ஆராய்ச்சிப் படிப்பையும் கொடுக்க வேண்டும்

UserMedia.blogspot.com

- பெண்களைப் பகுத்தறிவ இல்லாத சீவன்களாக வைத்திருப்பது பெருங்கொடுமை

2. பெண்ணுரிமையை விளக்குக
   - பெண்கள் உரிமை பெற்ற புது உலகைப் படைக்க வேண்டும்
   - கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இருக்க கூடாது
   - சமூகத் தொண்டு புரியும் பெண்களாகவும் இருக்க வேண்டும்
3. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?
   - மணக்கொடை ஒரு பெருநோய்
   - மகனின் கல்விச் செலவை முதலீடாய் கருதுகின்றனர்
   - அம்முதலீட்டை மருமகள் மூலம் மீண்டும் பெற நினைக்கிறார்கள்
   - இளைஞர்கள் இதனைத் தடுக்க வேண்டும்

4. பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?
   - கேட்போரை ஈர்க்கும் விதமாகத் தொடங்க வேண்டும்
   - சுருக்கமான முன்னுரையுடன் தொடங்கி , உடனே பொருளுக்குள் செல்ல வேண்டும்
   - இடத்திற்கு ஏற்பத் தொடக்கவுரை அமைய வேண்டும்
5. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.
   - கேட்போர் மனதில் பதியுமாறு தமது கருத்தை கூறி அழகுற முடிக்க வேண்டும்
   - பேச்சின் சுருக்கத்தை கூறி உணர்ச்சிகரமாக முடித்தல் வேண்டும்
   - குவிதையைக் கூறி முடித்தல் வேண்டும்

6. கடல் வணிகம் குறித்து எழுதுக
   - தமிழர்கள் பொன் , மணி , துகில் , முத்து ஆகியவைகளைக் கொண்டு கடல் வாணிகம் செய்தனர்
   - கிரேக்கம் , உதோமாபுரி , எகிப்து , சாவக நாடுகளுடன் கடல் வாணிகம் செய்தனர்.
   - மன்னன் சாலமனுக்கு யானைத்தந்தமும் , மயில் தோகையும் அனுப்பப்பட்டன.
7. உழவுத் தொழில் குறித்து எழுதுக.
   - புழந்தமிழகத்தில் உழுபவதே உயர்ந்தோர் ஆவர். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்கிறது குறள்
   - உண்டி கொடுத்தொரெ உயிர் கொடுத்தோர் என்பது புகழ்மொழி
   - வயல் மருதநிலம் ஆகும். அதன் தலைவன் வேந்தன் எனப் போற்றினர்
8. தமிழர் இசைக்கலையில் மேம்பட்டிருந்தனர் என்பதை நிறுவுக.
   - சங்க இலக்கியமும் , சிலப்பதிகாரமும் இசையைப் பற்றி கூறுகின்றனர்
   - நரம்பின் மறை என்னும் நூலை தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்
   - தமிழிசையே கர்நாடக இசையின் தாய் ஆகும்.

UserMedia.blogspot.com

9. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது?

( அல்லது)

காந்தியடிகள் வாய்மையைக் கடைப்பிடிக்க அடிப்படையாக அமைந்த நிகழ்சி எது?

- காந்தியடிகள் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்தார்
- முனிவரின் சதியால் மனைவி , மகன் ஆகியோரைப் பிரிந்து சுடுகாட்டில் பணி செய்கிறான் அரிச்சந்திரன்.
- அந்நிலையிலும் அவன் பொய் சொல்லவில்லை
- அவரைக் கண்ட காந்தியடிகள் தாமும் உண்மையையே பேச முடிவு செய்தார்

10. மனித நேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

- நான் தேச பக்தனாக இருப்பதற்குக் காரணம் நான் மனித நேயத்துடன் இருப்பது தான்
- நான் ஒரு குஜராத்தியன் என்பதைவிட " இந்தியன்" என்று கூறுவதையே விரும்புகிறேன்
- மொழியையும் நாட்டையும் தாண்டி மனிதனாக இருப்பதே பெருமைக்குரியது.

11. தொழில் நுட்பக் கல்வி குறித்து எழுதுக

- பத்தாம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றவர்கள்
- பல் தொழில் நுட்பக் கல்லூரி ( பாலிடெக்னிக்) யில் சேர்ந்து பயிலலாம்
- இதில் படித்தால் இக்காலக் கட்டத்தில் வேலை வாய்ப்புண்டு

12. பட்டதாரி ஆசிரியர் பணிக்குரிய கல்வித் தகுதிகள் குறித்து எழுதுக.

- மேல்நிலை வகுப்பு ( +2) முடித்ததும்
- கல்லூரியில் இளங்கலைப் பட்டம் ( B.A., B.Sc) பட்டம் பெற வேண்டும்
- பிறகு இளம் கல்வியியல் பட்டம் ( B.Ed) பட்டம் பெற்றால் பட்டதாரி ஆசிரியராகப் பணி பெறலாம்
- தற்பொழுது ஆசிரியர் தகுதி தேர்வு ( TET) எழுத வேண்டும்

13. சிறு தொழில் பயிற்சி பற்றிக் குறிப்பு எழுதுக.

- பத்தாம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றாலும் , பெறாவிட்டாலும்
- தொழில்பயிற்சி நிறுவனத்திற்கு ( ITI) சேரலாம்
- ஓராண்டு அல்லது ஈராண்டு பயிற்சி பெறலாம்

14. இராணுவம் காவல் முதலிய பணிகளில் சேர்வதற்கான தகுதிகளைக் கூறுக?

- பன்னிரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற வேண்டும்
- முதலில் உடற்கூறுத் தேர்வு நடைபெறும்
- பிறகு எழுத்துத் தேர்வு நடைபெறும்
- இவற்றில் தேர்ச்சி பெற்றால் பணியில் சேரலாம்

UserMedia.blogspot.com

## நெடு வினாக்கள் ( 8 மதிப்பெண்கள்)
## ( உரைநடை மற்றும் செய்யுள்)

1. ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுது
   - உயிரினும் ஓம்பப்படுவது ஒழுக்கம்
   - அது அனைத்து சிறப்புகளையும் தரவல்லது

| |
|---|
| • ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் |
| • உயிரினும் ஓம்பப்படும் |

   - ஒழுக்கத்தினால் எய்துவது உயர்வு
   - இழுக்கத்தினால் எய்துவது பெரும்பழி
   - நன்றிக்கு வித்தாவது நல்லொழுக்கம்
   - நல்லொழுக்கம் ஒருவற்கு மிகுந்த சிறப்பைத் தரும்
   - என்றும் இடும்பைத் தருவது தீயொழுக்கம்

| |
|---|
| • நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் |
| • என்றும் இடும்பைத் தரும் |

   - உலகில் வாழும் நல்லவர்களோடு பொருந்தி வாழத் தெரியாதவர்கள் பல கற்றும் கல்லாதவர் ஆவார்

**குறிப்பு : இவ்வினாவின் பதில் குறுவினாக்கள் 1,2,3,4,5 க்கு உரியன.**
**குறள்கள் மனனப் பகுதிக்கு உரியன**

2. காலமறிதலை வள்ளுவர் வழி நின்று விளக்குக?
   - காக்கை பகலில் கூகையை வெல்லும்
   - அதுபோர அரசர் தன்னைவிட வலிமையானவரை காலமறிந்து வெல்ல வேண்டும்
   - காலமும் இடமும் அறிந்து செயல்பட வேண்டும்
   - அப்போது உலகத்தை ஆளக் கருதினாலும் கைகூடும்

| |
|---|
| • ஞாலம் கருதினுங் கைகூடும் காலம் |
| • கருதி இடத்தாற் செயின் |

   - ஊக்கமுடையான் அடங்கி இருப்பது
   - ஆட்டுக்கடா பகையத் தாக்குவதற்குப் பின் வாங்குவது போன்றதாகும்
   - ஏற்ற காலம் வரும் போதே
   - அரிய செயல்களைச் செய்து முடிக்க வேண்டும்

| |
|---|
| எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே<br>செற்தற் கரிய செயல் |

   - இரைக்காக கொக்கு காத்திருப்பது போல் காத்திருக்க வேண்டும்
   - வாய்ப்பு கிடைத்தவுடன் விரைந்து செயலை முடிக்க வேண்டும்

UserMedia.blogspot.com

குறிப்பு : இவ்வினாவிற்கு விடை குறுவினா 6,7,8,9,10 – க்கு உரியன குறள்கள் மனனப்பகுதிக்கு உரியன

3. பெரியாரைத் துணையாகக் கொள்வதன் இலக்கணம். ஆதனால் வரும் சிறப்பு , பெரியார் துணையல்லாத வழி ஏற்படும் இழிவு ஆகியவை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

- அறத்தை அறிந்த பெரியோரது நட்பை அறிந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்
- அத்தகைய பெரியோர் நமது துன்பத்தைப் போக்கி மேலும் துன்பம் வராது காப்பார்

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்"

- பெரியோரை உறவினராயக் கொண்டு
- அவர் வழியில் நடத்தலே சிறந்த வலிமை
- அறிவிற் சிறந்ததோரைச் சார்ந்து நடப்பவர்க்கு
- பகைவரால் தீங்கு ஏற்படாது
- நல்லார் தொடர்பை கைவிடுதல் என்பது பலரோடு பகைத்துக் கொள்வதை விட பலமடங்கு தீமையத் தரும்
- குற்றம் கண்டு இடித்துத் திருத்துகின்ற பெரியாரைத் துணையாகக் கொள்ளாத அரசன் தானே அழிவான்

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்

- குற்றம் கண்டு இடித்துத் திருத்துகின்ற பொரியாரைத் துணையாகக் கொள்ளாத அரசன் தானே அழிவான்

**குறிப்பு : இவ்விடையுள் குறுவினா 26,27,28 அடங்கியுள்ளது**

4. பொருள் செயல்வகை குறித்து எழுதுக.

- மதிக்கத் தகாதவரையும் மதிக்கச் செய்வது பொருள் ஆகும்

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருள்ள தில்லை பொருள்

- செல்வம் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர், செல்வரைப் போற்றுவர்
- செல்வம் என்னும் அணையா விளக்கின் ஒளி பகை இருளைப் போக்கும்
- பிறர்க்கு தீங்குதாமல் நல்வழியில் ஈட்டிய பொருள் அறத்தையும் இன்பத்தையும் தரும்
- தீயவழியில் வந்த பொருளை நீக்குதல் வேண்டும்
- அரசுரிமையாலும் வரியாலும் பகைவரை வெல்வதாலும் வேந்தனுக்குப் பொருள் கிட்டும்
- கையில் பொருள் கொண்டு செய்யும் செயல் குன்றின் மேல் நின்று யானைப் போர் காண்பதற்குச் சமம்
-

UserMedia.blogspot.com

குன்றி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை

- பகைவரை வெல்ல பொருளைப் பெருக்க வேண்டும்

**குறிப்பு : இவ்விடையுள் குறுவினாக்கள் 29, 30 அடங்கியுள்ளது**

5. தமிழ் செம்மொழிக்குரிய பதினொரு தகுதிப்பாடுகளையும் பெற்றுள்ளது என்பதை நிறுவுக.

- **தொன்மை**
  இலெமூரியாக் கண்டமெனக் குறிப்படப்படும் குமரிக் கண்டத்தில் பிறந்த முதல் மனிதன் பேசிய மொழி ' தமிழ்' என்பது மாந்திரியல் அறிஞர் ' எலியட்' முதலியோரின் கருத்து
- **பிறமொழித் தாக்கமின்மை**
  தனக்கெனத் தனிநோக்கும் போக்கும் உடையது
- **தாய்மை**
  தமிழ் மொழி திராவிட மொழிகளுக்கும் பிற மொழிகளுக்கும் தாயாக விளங்குகிறது.
- **தனித்தன்மை**
  மனித நிலம் முழுவதும் ஒன்றே குலம் என ஏற்றிப் போற்றுவது தமிழ்
- **பொதுமைப் பண்பு**
  தமிழர் தமக்கென வாழாது பிறர்குரியரை ஏற்றினர். ஒன்றே குலம் எனப் போற்றினர். தீதும் நன்றும் விளைவது அவரவர் செயலால் என்றுணர்ந்தனர்
- இலக்கிய வளமும் , இலக்கணச் சிறப்பும் உடையது
- **நடுவுநிலைமை**
  சங்க இலக்கியங்கள் இனம், மொழி, மதம் கடந்தவை. உலகத்தார் ஏற்கும் பொதுக்கருத்துகள் உடையவை.

6. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்தெழுதுக

( அல்லது)

பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக.

- நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழ் புரட்சி ஏற்பட பெண்கல்வி தேவை
- பெண்களின் உரிமையான கல்வி சமுக மாற்றத்திற்கு முக்கியம்
- பெண்களுக்கு உலகப்படிப்பையும் ஆராய்ச்சிப் படிப்பையும் கொடுக்க வேண்டும்
- பெண்களைப் பகுத்தறிவு இலலாத சீவன்களாக வைத்திருப்பது பெருங் கொடுமை
- பெண்கள் உரிமை பெற்று புது உலகைப் படைக்க வேண்டும்
- கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இருக்கக் கூடாது
- சமூகத் தொண்டு புரியும் பெண்களாகவும் இருக்க வேண்டும்

UserMedia.blogspot.com

- மணக்கொடை குழந்தை திருமணம் ஒழிக்கப்பட வேண்டும்
- ஒழுக்கமும் கற்பும் இருபாலருக்கும் சமம்
- கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்வதில் தீங்கில்லை

**குறிப்பு : இவ்விடையுள் உரைநடை சிறுவினா 1 , 2 அடங்கியுள்ளது**

7. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்தெழுதுக?

(அல்லது)

பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக?

- நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழ் புரட்சி ஏற்பட பெண்கல்வி தேவை.
- பெண்களின் உரிமையான கல்வி சமூக மாற்றத்திற்கு முக்கியம்.
- பெண்களுக்கு உலகப்படிப்பையும் ஆராய்ச்சிப் படிப்பையும் கொடுக்க வேண்டும்.
- பெண்களைப் பகுத்தறிவு இல்லாத சீவன்களாக வைத்திருப்பது பெருங் கொடுமை.
- பெண்கள் உரிமை பெற்று புது உலகைப் படைக்க வேண்டும்.
- கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இருக்கக் கூடாது.
- சமூகத் தொண்டு புரியும் பெண்களாகவும் இருக்க வேண்டும்.
- மணக்கொடை குழந்தை திருமணம் ஒழிக்கப்பட வேண்டும்.
- ஒழுக்கமும் கற்பும் இருபாலருக்கும் சமம்.
- கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்வதில் தீங்கில்லை.

**குறிப்பு: (இவ்விடையுள் உரைநடை சிறுவினா 1,2 அடங்கியுள்ளது)**

8. அம்பேத்கார் அரும்பணிகள் குறித்து எழுதுக?

- 1924-ல் கேரளா வைக்கத்தில் ஆலய நுழைவு முயற்சி.
- 1927-ல் மராட்டிய மகாத்துக் குளத்தில் தண்ணீர் எடுக்கும் போராட்டம்.
- 1930-ல் வட்டமேசை மாநாட்டில் ஒடுக்கப்பட்டோருக்காக உரிமைக்குரல் கொடுத்தல்.
- 1946-ல் மக்கள் கல்விக்கழகம் தோற்றுவித்தல். சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில் அனைத்துப் பாடங்களும் கற்பிக்க ஆவன செய்தல்.
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை அம்பேத்கர் ஒருவரே செய்து முடித்தார்.

9. அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?

- சாதி களையப்பட வேண்டியது, நன்மை தராதது, தீமை விளைவிப்பது.
- இலட்சிய கழகத்திற்கு அடிப்படை.

1. சுதந்திரம் - உயிரையும் உடைமையையும் பாதுகாத்தல்.
2. சமத்துவம் - எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துதல்.
3. சகோதரத்துவம் - சனநாயகத்தின் மறுபெயர் தான் சகோதரத்துவம்.
4. அம்பேத்கரின் பங்கு – சமுதாயம் என்னும் மரத்தின் வேரைச் சாதிப் புழுக்கள் அரித்து விடாமல் தடுத்த நச்சுக்கொல்லி மருந்து அம்பேத்கர்.
5. சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்கள் உயர்நிலை அடைய வேண்டுமென்று விரும்பினார் அம்பேத்கர்.

10. மேடைப்பேச்சின் கூறுகளை எழுதுக?

- மேடைப்பேச்சு எடுத்தல், தொடுத்தல், முடித்தல் என முக்கூறுகளைக் கொண்டது.
- கேட்போரை ஈர்க்கும் விதமாகத் தொடங்க வேண்டும்.
- சுருக்கமான முன்னுரையுடன் தொடங்கி, உடனே பொருளுக்குள் செல்ல வேண்டும்.
- இடத்திற்கு ஏற்ப தொடக்கவுரை அமைய வேண்டும்.
- கேட்போர் மனதில் தமது கருத்தைக் கூறி அழகுற முடிக்க வேண்டடம்.
- பேச்சின் சுருக்கத்தைக் கூறி உணர்ச்சிகரமாக முடித்தல் வேண்டும்.
- கவிதையைக் கூறி முடித்தல் நலம்.

UserMedia.blogspot.com

- பேச்சுக்கலை மக்களுக்கு அறிவுப் புகட்டி, இலட்சியப் பாதையில் அழைத்துச் செல்ல வல்லது.

**குறிப்பு: (இவ்விடையுள் உரைநடை சிறுவினாக்கள் 4,5 உள்ளது)**

11. திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப் பணிகளைத் தொகுத்தெழுதுக?
    - திரைப்படம் எடுக்கப்படும் முன் திரைப்படக்கதை, கதைமாந்தர் தேர்வு, தேர்வு செய்யப்பட்ட கதை, உரையாடல், பாடல் முதலியன ஆயத்தம் செய்யப்படுகின்றன.
    - நடிகர் நடிகையர், தோழன் தோழியர், பணியாளர்கள் என நடிகர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர்.
    - அவர்களுக்கு ஏற்ற உடைகள் வடிவமைக்கப்படுகின்றன.
    - இசைவான குரல் இல்லாதவர்களுக்கு வேறு ஒருவர் குரல் தர முடியும்.
    - ஆற்றல்மிக்க இயக்குநரும், உதவி இயக்குநரும் நடிக்க வைக்கின்றனர்.
    - படப்பிடிப்பின் மூலம் திரைப்படக்காட்சிகள் படமாக்கப்படுகின்றன.

**குறிப்பு:**

- மனனப் பகுதியைப் பிழையின்றி எழுத பயிற்சி செய்து கொள்ளவும்.
- தொடர்நிலைச் செய்யுளில், கதையை வினா வடிவில் தயார் செய்து கொள்க. (சிலம்பு, கம்பராமாயணம்)
- 10 உரைநடையிலும் ஏதேனும் ஒருபத்தி கொடுத்து வினா கேட்கப்படும்.

**கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையெழுதுக.**

**"தித்திக்குந் தெள்ளமுதாய் தெள்ளமுதின் மேலான**
**முத்திக் கனியே என் முத்தமிழே – புத்திக்குள்**
**உண்ணப் படுந்தேனே உன்னோடுவந்துரைக்கும்**
**விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்."**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? தமிழ்விடுதூது
2. முத்தமிழ் - விரித்து எழுதுக - முத்தமிழ் - இயல், இசை, நாடகம்
3. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்து எழுதுக
   தித் _திக்குந் முத்திக் உண்ணப் விண்_ணப்பம்
4. உன்னோடு வந்துரைக்கும் - பிரித்தெதுழுக - உன்னோடு + உவந்து + உரைக்கும்
5. **விளம்பக்கேள் - பொருள் கூறுக - சொல்லக் கேட்பாயாக**

**" அரியா சனமுனக்கே யானால் உனக்குச்**
**சரியாரும் உண்டோ தமிழே – விரிவார்**
**திகழ்பா ஒருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்**
**புகழ்பா வினங்கள் மடைப் போக்கா – நிகழவே"**

1. அரியாசனம் என்பதன் பொருளை எழுதுக – சிங்காதனம்
2. பா ஒரு நான்கு என்னும் தொடரில் குறிக்கும் நால்வகைப் பாக்களின் பெயர்களை எழுதுக. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
3. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? – தமிழ்விடுதூது
4. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைகளை எழுதுக.
   அரியா - திகழ்பா
   சரியாரும் - புகழ்பா
5. பாவினங்கள் - இச்சொல்லைப் பிரித்து எழுதுக – பா + இனங்கள்

**"நல்லேரி னால் செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்**
**சொல்லேர் உழவர் தொகுத்தீண்டி – நல்லநெறி**
**நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்**

UserMedia.blogspot.com

**மேலே பலன்பெறச்செய் விக்குநாள் - மேலோரில்''**

1. நாற்கரணம் - பிரித்து எழுதுக – நான்கு + கரணம்
2. சொல்லோர் உழவர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்? – புலவர் பெருமக்கள்
3. இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது? – தமிழ்விடுதூது
4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எழுதுக.

ந**ல்**லோரி - நா**லே**
சொ**ல்**லோர் - மே**லே**

5. நாற்பொருள் – விரித்து எழுதுக. அறம்பொருள், இன்பம், வீடு

"பாத்தனதாக் கொண்ட பிள்ளைப் பாண்டியன் - வில்லிஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெளலாம்
வெட்டிக் களையறிக்க மேலாய்த்தூர் - கட்டி".

1. இப்பாடலில் குறிப்பிடப்படும் புலவர்களின் பெயர்களைக் கூறுக.
அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூர் ஆழ்வார், ஒட்டக்கூத்தர்
2. செவியறுத்து – பிரித்து எழுதுக – செவி + அறுத்து
3. சீத்தையர் - பொருள் கூறுக – போலிப்புலவர்
4. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைச் சொற்களை எடுத்தெழுது

பா**த்**தனதாக் - கு**ட்**டிச்
கூ**த்**தனிவர் - வெ**ட்**டிக்

5. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? தமிழ்விடுதூது.

**குறிப்பு : வினா எண் 45ற்கு**

**நற்றிணை, புறநானூறு, கலித்தொகை, நந்திக்கலம்பகம், நிற்க நேரமில்லை ஆகிய பகுதிகளும் வினாக்கள் கேட்கப்படும்.**

UserMedia.blogspot.com

# பள்ளிக்கல்வித் துறை
# தமிழ்நாடு

## பத்தாம் வகுப்பு
## தமிழ் இரண்டாம் தாள்
## 2012-13

வெளியீடு
பள்ளிக் கல்வித்துறை
தமிழ்நாடு

மாணவக்கண்மணிகளே!

- முதலில் தமிழ்தானே என்று கருதாமல் தாளைத் தமிழ் என்று எண்ணுக.
- விடைகளில் அடித்தல், திருத்தல் வருவதை முற்றிலும் தவிர்த்திடுக.
- வினாக்களையே விடைகளின் தலைப்புகளாகத் தந்து அடிக்கோடிடுக.
- நெடு வினாக்களுக்கு மட்டுமன்று சிறு மற்றும் குறு வினாக்களையும் தலைப்பிட்டு எழுதுவது ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றுத்தரும்.
- வரி ஆரம்பத்தில் ஒற்று ( மெய்) எழுத்துகள் வாராமல் கவனித்து எழுதுக.
- செய்யுள் ( மனப்பாடம்) எழுதும்போது அடி பிறழாது எழுதுவது நல்லது.
- விடைத்தாளின் பக்க இறுதியில் விடைகள் முடிந்தால், அடுத்த வினாவின் விடையை அடுத்த பக்கத்தில் எழுதத் தொடங்குவதே சாலச்சிறந்தது.
- வினாத்தாளில் உள்ள வினா எண்களையே பயன்படுத்துக.

UserMedia.blogspot.com

வினாத்தாள் திட்டவரைவு | பத்தாம் வகுப்பு | தமிழ் – இரண்டாம் தாள்

| திறன் வகை | அறிதல் | | | புரிதல் | | | பயன்படுத்தல் | | | திறன்கள் | | | மொத்தம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வினாவகை | பு.வி | கு.வி | சி.வி | பு.வி | கு.வி | சி.வி | பு.வி | கு.வி | சி.வி | பு.வி | சி.வி | நெ.வி | பு.வி | கு.வி | சி.வி | நெ.வி |
| பாடப்பகுதி/மதிப்பெண்கள் | 1 | 2 | 5 | 1 | 2 | 5 | 1 | 2 | 5 | 1 | 5 | 10 | 1 | 2 | 5 | 10 |
| இலக்கணம் | 10 | 2 +1• | 1 | | 3+1• | | | | 1+1• | | | | 10 | 5 +2• | 2+1• | |
| துணைப்பாடம் | | | | | | 1• | | | 2 | | | | | | 2+1• | |
| கட்டுரை | | | | | | | | | | | | 1 + 1• | | | | 1 + 1• |
| கடிதம் | | | | | | | | | | | | 1 + 1• | | | | 1 + 1• |
| மொழிப்பயிற்சி | 1 | | | 9 | | 2 | | | | | | | 10 | | 2 | |
| பாநயம் பாராட்டல் | | | | | | 1 | | | | | | | | | 1 | |
| படிவம் நிரப்புதல் | | | | | | | | | 1 | | | | | | 1 | |
| படைப்பாற்றல் | | | | | | | | | | | 1+1• | | | | 1+1• | |
| வாழ்வியல்திறன் / மதிப்புக்கல்வி | | | | | | | | | 1 | | | | | | 1 | |
| மொத்த வினாக்கள் | 11 | 2 +1• | 1 | 9 | 3 + 1• | 3 +1• | | | 5 +1• | | 1+1• | 2 + 2• | 20 | 5 + 2• | 10 +2• | 2 + 2• |
| மொத்த மதிப்பெண்கள் | 11 | 4+2* | 5 | 9 | 6+2* | 15+5* | | | 25+5* | | 5+5• | 20+20* | 20 | 10+4* | 50+15* | 20+20* |
| | | | | | | | | | | | | | | | 100+39* | 139 |

குறிப்பு : பு.வி – புறவயவினா கு.வி – குறுவினா சி.வி – சிறுவினா நெ.வி – நெடுவினா

### தமிழ் – முதல் தாள்

| வினாவகை | மதிப்பெண் | |
|---|---|---|
| | செய்யுள் | உரைநடை |
| புறவயவினா | 10 | 10 |
| குறுவினா | 10 | 10 |
| சிறுவினா | 17 | 17 |
| நெடுவினா | 8 | 8 |
| மனப்பாடப்பகுதி | 10 | - |
| மொத்தம் | 55 | 45 |

### தமிழ் இரண்டாம் தாள்

| பாடப்பகுதி | மதிப்பெண் |
|---|---|
| இலக்கணம் | 30 |
| துணைப்பாடம் | 10 |
| கட்டுரை | 10 |
| கடிதம் | 10 |
| மொழிப்பயிற்சி | 20 |
| பாநயம் | 5 |
| படிவம் | 5 |
| படைப்பாற்றல் | 5 |
| வாழ்வியல் திறன் | 5 |
| மொத்தம் | 100 |

UserMedia.blogspot.com

# இலக்கணம்

## ஒரு மதிப்பெண் வினா விடை

1. ‘வளையல்’ இச்சொல்லின் ஐகாரம் **ஒரு** மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.
2. குறுக்கங்கள் : ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், **மகரக்குறுக்கம்** ஆய்தக்குறுக்கம் என நால்வகைப்படும்.
3. ஈற்றில் ஐகாரம் குறைந்து வந்த சொல் **திண்ணை** ஆகும்.
4. பல் + தீது என்பது **பஃறீது** எனப் புணரும்.
5. ‘வௌவால்’ – இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் **ஔகாரக்குறுக்கம்.**
6. பூங்குழலி பொம்மை செய்தாள். இத்தொடரைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் போது, பொம்மை **பூங்குழலியால்,** செய்ய**ப்பட்டது** என வரும்.
7. அழகன் பாடம் எழுதுகிறான். இத்தொடரில், ஓர் எழுவாய் ஒரு பயனிலையைக் கொண்டு முடிந்ததால் **தனிநிலைத்** தொடர் ஆகும்.
8. அன்பரசன் திருக்குறளைக் கற்றான் இத்தொடர் பிறவினையாக மாறும்போது, அன்பரசன் திருக்குறளைக் **கற்பித்தான்** என வ ரும்
9. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருவது **தனிமொழி.**
10. தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்.**
11. வினைமுற்று **தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று** என இருவகைப்படும்.
12. ஓர் எச்சவினை **பெயரைக்** கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும்.
13. இளவழகன் வந்தான். இது **வெளிப்படை** தொடர்.
14. மாடு என்னும் சொல் **அஃறிணைப் பொது** ஆகும்.
15. மாடு கன்றை ஈன்றது. இத்தொடரில் மாடு என்பது **பசுவைக்** குறிக்கும்.
16. ஒரு பொருள் குறித்து வரும் சொற்களையே **ஒருபொருட்பன்மொழி** என்பர்.
17. ஒருபொருட்பன்மொழிக்குச் சான்று **ஓங்கியுயர்ந்த** மரம்
18. ‘‘இது செய்வாயா?’’ என்னும் வினாவிற்கு வயிறு வலிக்கும் எனக்கூறுவது **உறுவதுகூறல்** விடை ஆகும்.
19. ‘‘ஆடத் தெரியுமா?’’ என்னும் வினாவிற்குப் பாடத் தெரியும் எனக் கூறுவது **இனமொழி** விடை ஆகும்.
20. ‘‘நன்னூல் கிடைக்குமா’’ எனக் கடைக்காரரிடம் கேட்பது **கொளல்** வினா ஆகும்.
21. வேய்புரை தோள் – இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு **புரைய.**
22. வடக்கு என்னும் திசைப் பெயரோடு பிற திசைகள் வந்து சேரும்போது **நிலைமொழி ஈறும் மெய்யும் நீங்கும்.**
23. மேற்கு + நாடு என்பது **மேல்நாடு** எனச் சேரும்.
24. கருமை + குழி என்பது **ஈறுபோதல், இனமிகல்** எனும் விதிகளின்படி புணரும்.
25. மரவேர் என்பது **கெடுதல்** விகாரம் ஆகும்.
26. அகம், புறம் ஆகிய இரண்டும் **பொருளிலக்கணம்** இலக்கணம் ஆகும்.
27. குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் **அன்பின் ஐந்திணை** எனப்படும்.
28. நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி **கடலும் கடல் சார்ந்த இடமும்** ஆகும்.

UserMedia.blogspot.com

29. யாமம் என்பது இரவு 10 மணி முதல் **காலை 2 மணி** வரை ஆகும்.
30. மருதம், நெய்தல் ஆகிய இரண்டிற்கும் **ஆறு** பெரும் பொழுதுகள் வரும்.
31. திருமால் **முல்லை** நிலத்திற்குரிய தெய்வம்.
32. மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் **மருதத்** திணைக்குரியவை.
33. நெய்தல் திணைக்குரிய தொழில் **மீன்பிடித்தல்** ஆகும்.
34. நண்பகல் என்பது **பாலை** திணைக்குரிய சிறு பொழுது.
35. பொருளிலக்கணம் **இரண்டு** வகைப்படும்.
36. அகத்திணைகள் **ஏழு** வகைப்படும்.
37. மார்கழி, தை ஆகிய இரண்டும் **முன்ப**னி காலத்திற்குரியன.
38. மருத நிலத்திற்குரிய தெய்வம் **இந்திரன்.**
39. பாலை நிலத்திற்குரிய பறவைகள் **புறா, பருந்து.**
40. புறத்திணைகள் **பன்னிரண்டு** வகைப்படும்.
41. நிரை கவர்தல் என்பது **வெட்சி.**
42. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது **வஞ்சித்திணை.**
43. பாடாண் திணை என்பது **ஆண்மகனின் ஒழுகலாறுகள்.**
44. ஒருதலைக்காமம் என்பது **கைக்கிளை.**
45. தன் நாட்டைக் காப்பாற்ற வந்த மாற்றரசனோடு எதிர்த்துப் போரிடுவது **காஞ்சி** ஆகும்.
46. உலகுஎன்னும்சொல்வெண்பாவில்ஈற்றடியின்ஈற்றுச்சீராயின்அதன்வாய்பாடு**பிறப்பு**ஆகும்.
47. நல்லவை இச்சொல்லை அலகிட்டால் **நேர்நிரை** எனப்பிரியும்.
48. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி **முச்சீராய்** வரும்.
49. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் **ஏகாரத்தில்** முடிவது சிறப்பு.
50. நேரிசை வெண்பா இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று **முதல் இரண்டடி ஒரு** விகற்பத்தானும் **கடைசி இரண்டடி ஒரு** விகற்பத்தானும் வரும்.
51. இரண்டாம்அடியில்தனிச்சொல்பெற்றுப்பலவிகற்பத்தான்வருவது**இன்னிசைவெண்பா**ஆகும்.
52. வெண்பாவின் ஓசை **செப்பலோசை** ஆகும்.
53. ஆசிரியப்பாவின் வேறு பெயர் **அகவற்பா** ஆகும்.
54. ஆசிரியப்பாவின் ஓசை **அகவலோசை** ஆகும்.

## II. பொருத்துக

| | வினா | விடை |
|---|---|---|
| 1. | ஐகாரக்குறுக்கம் – முஃடீது | ஐகாரக்குறுக்கம் – தலைவன் |
| | ஔகாரக்குறுக்கம் – தலைவன் | ஔகாரக்குறுக்கம் – வௌவால் |
| | ஆய்தக்குறுக்கம் – போன்ம் | ஆய்தக்குறுக்கம் – முஃடீது |
| | மகரக்குறுக்கம் – வௌவால் | மகரக்குறுக்கம் – போன்ம் |
| 2. | வெளிப்படைச் சொற்கள் – சோறு உண்டான் | வெளிப்படைச்சொற்கள் – கல்,மண் |
| | குறிப்புச் சொல் – கல், மண் | குறிப்புச் சொல் – மாடுபால் கறந்தது |
| | இனங்குறித்தல் – மாடு பால் கறந்த | இனங்குறித்தல் – சோறு உண்டான் |

**வினா**

3. அறிவினா – வருவாயா? எனில் வாரேன் என்பது
ஏவல் வினா – உண்டாயா? எனில் வயிறு வலிக்கும் என்பது
மறைவிடை – ‘‘இதனைச் செய்வாயா?’’ எனில் ‘‘நீயே செய்’’ என்பது
உறுவது கூறல்– ‘‘இதன் பொருள் யாது?’’ என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது

UserMedia.blogspot.com

**விடை**

அறிவினா - ''இதன் பொருள் யாது?'' என ஆசிரியர் மாணவரிடம் கேட்பது

ஏவல் வினா - ''இதனைச் செய்வாயா?'' எனில் ''நீயே செய்'' என்பது

மறைவிடை - வருவாயா? எனில் வாரேன் என்பது

உறுவது கூறல்- உண்டாயா? எனில் வயிறு வலிக்கும் என்பது

| | **வினா** | | **விடை** | |
|---|---|---|---|---|
| 4 | அடிஅகரம் ஐ ஆதல் - | வெற்றிலை | அடிஅகரம் ஐ ஆதல் - | பைங்கூழ் |
| | ஆதி நீடல் - | கரும்பலகை | ஆதி நீடல் - | மூதூர் |
| | இனமிகல் - | பைங்கூழ் | இனமிகல் - | கரும்பலகை |
| | தன்னொற்றிரட்டல்- | மூதூர் | தன்னொற்றிரட்டல் - | வெற்றிலை |
| 5. | மயில் - | கரையும் | மயில் - | அகவும் |
| | கூகை - | கத்தும் | கூகை - | குழறும் |
| | யானை - | குழறும் | யானை - | பிளிறும் |
| | காகம் - | அகவும் | காகம் - | கரையும் |
| | ஆடு - | பிளிறும் | ஆடு - | கத்தும் |

6. குறிஞ்சி - முயல், மான் குறிஞ்சி - புலி, கரடி முல்லை

- புலி, கரடி முல்லை - முயல், மான்

மருதம் - முதலை, சுறா மருதம் - எருமை, நீர்நாய்

நெய்தல் - எருமை, நீர்நாய் நெய்தல் - முதலை, சுறா

## III. தொடரை மாற்றி அமைக்க.

1. திருக்குறளை அனைவரும் அறிவர் - வினாத்தொடராக அமைக்க
   **யாரெல்லாம் திருக்குறளை அறிவர்?**
2. இமயமலை மிகவும் உயரமானது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.
   **என்னே, இமயமலையின் உயரம்!**
3. கிளி கல்லால் அடிபட்டது - உணர்ச்சித்தொடராக மாற்றுக.
   **அந்தோ, கிளி கல்லால் அடிபட்டுவிட்டதே!**
4. வாரியார், ''குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்க வேண்டும்'' என்றார் - அயற்கூற்றாக மாற்றி எழுதுக.
   **வாரியார் குழந்தைகளிடம் நாள்தோறும் திருவாசகம் படிக்க வேண்டும் என்று கூறினார்**
5. நேற்று புயல் வீசியது; மரங்கள் சாய்ந்தன. - கலவைச் சொற்றொடராக மாற்றி எழுதுக
   நேற்று புயல் வீசியதால் மரங்கள் சாய்ந்தன.

## IV. சந்திப்பிழையற்ற தொடர் எது?

1. கயிறு கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
   **கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.**
   கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.

## V. கீழுள்ள தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

1. அவள் விளா நோகச் சிறித்தாள்.
   **அவள் விலா நோகச் சிரித்தாள்.**
2. அச்சம், மடம், நானம், பயிற்பு இவை பெண்கலின் அணிகளன்கள்
   **அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவை பெண்களின் அணிகலன்கள்**
3. ஒருக்கால் இன்று மளை பெய்யளாம்.
   **ஒருக்கால் இன்று மழை பெய்யலாம்.**
5. இன்று வீட்டிர்க்கு வந்தால் அருசுவை உனவு உன்டு.

UserMedia.blogspot.com

**இன்று வீட்டிற்கு வந்தால் அறுசுவை உணவு உண்டு.**

6. சுவற்றில் விளம்பரம் செய்யாதே.
   **சுவரில் விளம்பரம் செய்யாதே.**

**VI. பிறமொழிச் சொல்லற்ற தொடர் எது?**

1. அவர்களிருவருக்கும் இடையே விவாதம் நடந்தது.
   **அவர்களிருவருக்கும் இடையே உரையாடல் நடந்தது.**
   அவர்களிருவருக்கும் இடையே கான்வோர்சேசன் நடந்தது.

**VII. பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.**

1. ஷேத்திரங்கள் தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
   **புனிதத்தலங்கள்தோறும் சென்று தெய்வச்சிலைகளை வழிபடுக.**
2. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
   **இப்பாதையில் பயணம் செல்லுங்கள்.**
3. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
   **இந்தச் சட்டை மிகவும் விலையுயர்ந்தது.**
4. நாளை நடக்கவிருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.
   **நாளை நடக்கவிருக்கும் விளையாட்டுப் போட்டியில் இந்தியா கண்டிப்பாக வெற்றியடையும்.**
5. நான் இந்தக் காலேஜின் ஓல்ட் ஸ்டுடண்ட்.
   **நான் இந்தக் கல்லூரியின் பழைய மாணவன்.**

**VIII. வழூஉச் சொல்லற்ற தொடர் எது?**

1. வலதுபக்கச் சுவரில் எழுதாதே
   **வலப்பக்கச் சுவரில் எழுதாதே**

**IX. தொடர்கள் எவ்வகையானவை?**

1. பிசிராந்தையார் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார். **செய்தி வாக்கியம்**
2. குழந்தையை அடித்தது யார்? **வினா வாக்கியம்**
3. நம் நாட்டுக்கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது. **செயப்பாட்டு வினை வாக்கியம்**
4. வயலில் ஆடுகள் மேய்ந்தில. **எதிர்மறை வாக்கியம்**
5. காந்தியடிகள் உண்மை பேசாமல் இரார். **பொருள்மாறா எதிர்மறை வாக்கியம்**

**X. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக**

1. அண்ணன், தம்பி வீடு சென்றான்.
   அண்ணன் தம்பி <u>**வீட்டுக்குச்**</u> **(கு)** சென்றான்.
2. மாணாக்கர்கள் வட்டமாக உட்காரச் செய்க.
   <u>**மாணாக்கர்களை**</u> **(ஐ)** வட்டமாக உட்காரச் செய்க.
3. நான் திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
   <u>**எனக்கு**</u> **(கு)** திருக்குறளில் ஆர்வம் மிகுதி.
4. வேல்விழி திருக்குறன் படித்தான்.
   வேல்விழி <u>**திருக்குறளைப்**</u> **(ஐ)** படித்தான்.

**XI. உரிய உமவ உருபை இணைத்து எழுதுக**

1. மான் <u>**அன்ன**</u> மருளும் பார்வை.
2. கிளி<u>**யன்ன**</u> மொழிபேசும் நங்கை நல்லாள்.
3. வேய்<u>**புரை**</u> தோளுடைய வீரன் வந்தான்.

**XII. தொகை உவமைகளை விரியுவமைகளாக மாற்றுக**

UserMedia.blogspot.com

1. மதிமுகம்

**மதி போன்ற முகம்**

2. பவளவாய்

**பவளம் போன்ற வாய்**

**XIII. விரியுவமையை தொகையுவமைகளாக மாற்றுக**

1. கயல் போன்ற வழி

**கயல்விழி**

2. தேன் போன்ற மொழி

தேன்மொழி

**XIV. அடைப்புக்குள் உள்ளவாறு மாற்றுக**

1. மலர்ப்பாதம் (உருவகமாக) - **பாதமலர்**

விழிக்கயல் (உவமையாக) - **கயல்விழி**

கனிவாய் (உருவகமாக) - **வாய்க்கனி**

பல்முத்து (உவமையாக) - **முத்துப்பல்**

**XV. இளமைப் பெயர்களையும் பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1. ஆடு | – கன்று | 1. ஆடு | – குட்டி |
| 2. மான் | – பிள்ளை | 2. மான் | – கன்று |
| 3. கீரி | – குட்டி | 3. கீரி | – பிள்ளை |
| 4. சிங்கம் | – குஞ்சு | 4. சிங்கம் | – குருளை |
| 5. கோழி | – குருளை | 5. கோழி | – குஞ்சு |

**XVI. தொகைச் சொற்களை விரித்தெழுதுக**

1. இருவினை – நல்வினை, தீவினை
2. முத்தமிழ் – இயல், இசை, நாடகம்
3. மூவேந்தர் – சேர, சோழ, பாண்டியர்
4. நானிலம் – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
5. ஐந்திணை – குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

**XVII. மரபுத் தொடருக்கேற்ற பொருளைத் தேர்ந்தெழுதுக**

1. இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர். **பரம்பரை பரம்பரையாக**

2. எம்.ஜி. இராமச்சந்திரன் திரைவானில் கொடிகட்டிப் பறந்தார்.

**தனிப்புகழோடு விளங்குதல்**

**XVIII. மரபுத்தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக**

1. **சீட்டு கிழிந்து விட்டது**

கையூட்டு பெற்ற அதிகாரியின் சீட்டு கிழிந்து விட்டது.

2. **முதலைக் கண்ணீர்**

தவறு செய்துவிட்டு தான் அந்தத் தவறைச் செய்யவில்லை என்று திருடன் முதலைக் கண்ணீர் வடித்தான்.

3. **கயிறு திரித்தல்**

வானத்திலிருந்து ஒரு தேவதை இறங்கி வந்ததைப் பார்த்ததாகக் கயிறு திரித்தான் ஒருவன்.

**XIX. சொற்களுக்கு இரு பொருள் தருக**

1. ஆறு – வழி, நதி
2. திங்கள் – மாதம், சந்திரன்
3. மாலை – சாயுங்காலம், பூமாலை
4. நகை – புன்னகை, ஆபரணம்

UserMedia.blogspot.com

5. மெய் – உண்மை, உடல்

**XX. உரிய வினைமரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. எங்கள் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் **கட்டப்பட்டது.** (கட்டப்பட்டது / எழுப்பப்பட்டது
2. பாரதியார் செய்யுளை **இயற்றினார்.** (பாடினார் / இயற்றினார்)
3. வேடன் **எய்த** அம்பு யானையை வீழ்த்தியது. (எய்த / செலுத்திய)
4. மாறன் ஓவியத்தை **புனைந்தான்.** (வரைந்தான் / புனைந்தான்)
5. அந்தச் சிற்பம் ஒரே கல்லில் **வடிக்கப்பட்டது.** (வடிக்கப்பட்டது / செதுக்கப்பட்டது)

**XXI. பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்சொற்களை எழுதுக**

1. வேலன் சுயதொழிலில் அதிக இலாபம் ஈட்டினான்.
   வேலன் சுயதொழிலில் அதிக **வருமானம்** ஈட்டினான்.
2. அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
   அந்த **அறிவியில் அறிஞரின்** கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.
3. அனைவரையும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.
   அனைவரையும் **உண்ணாநோன்புப்** போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவர் அழைப்பு விடுத்தார்.

4. அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த நிபுணர்.
   அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச் சிறந்த **வல்லுநர்.**
5. அலங்கரித்துக் கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.
   **ஒப்பனை** செய்து கொள்வதில் பெருவிருப்புக் கொண்டிருந்தாள் எழிலி.

**XXII. இணையான தமிழ்ப் பழமொழிகளை அறிக**

1. Health is Wealth.
   **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.**
2. Too much of anything is good for nothing.
   **அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.**
3. No pain, no gain.
   **உழைப்பின்றி ஊதியமில்லை.**
4. Haste makes waste.
   **பதறாத காரியம் சிதறாது.**
5. Knowledge is power.
   **அறிவே ஆற்றல்.**
6. Charity begins at home.
   **தனக்கு மிஞ்சிதான் தானமும் தருமமும்.**
7. Covet all lose all.
   **பேராசை பெருநட்டம்.**
8. Diamonds cut diamonds.
   **முள்ளை முள்ளால் எடு.**
9. East or west, Home is the best.
   **எலி வளையானாலும் தனி வளையே சிறந்தது.**
10. Empty vessels make the greatest sound.
    **குறைகுடம் கூத்தாடும்.**
11. Money makes many things.
    **பணம் பத்தும் செய்யும்.**
12. Eagles don’t catch files.
    **புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.**

UserMedia.blogspot.com

13. Old is Gold.
பழமையே பெருமை
14. Prevention is better than cure.
**வரும்முன் காப்பதே சிறந்தது.**
15. Slow and steady wins the race.
**முயற்சி திருவினையாக்கும்.**
16. First deserve, then desire.
**முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?**
17. Little strokes fell great oaks.
**அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.**
18. Tit for Tat.
**யானைக்கும் பானைக்கும் சரி.**
19. Work is worship.
**செய்யும் தொழிலே தெய்வம்.**
20. Time is gold.
**காலம் பொன் போன்றது.**
21. Birds of the same feather flock together.
**இனம் இனத்தோடு சேரும்.**
22. Every cock will crow upon his own dunghill.
**வீட்டில் எலி வெளியில் புலி.**
23. Failure is the stepping stone to success.
**தோல்வியே வெற்றிக்கு அடிப்படை.**
24. Art is long and life is short.
**கல்வி கரையில, கற்பவர் நாள் சில.**
25. Look before you leap.
**ஆழம் அறியாமல் காலை விடாதே.**
26. Man proposes, God disposes.
**நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும்.**
27. Strike the rod while it is hot.
**காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.**
28. Familiarity breeds contempt.
**பழகப் பழகப் பாலும் புளிக்கும்.**
29. The mills of God grind slow but sure.
**அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்.**
30. The face is the index of the mind.
**அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.**
31. All that glitters are not gold.
**மின்னுவதெல்லாம் பொன்னல்ல.**
32. Barking dogs seldom bite.
**குரைக்கிற நாய் கடிக்காது.**
33. Even a pin is good for something.
**சிறுதுரும்பும் பல் குத்த உதவும்.**
34. Take time by the forlock.
**காலத்தே கடமையைச் செய்.**

35. A friend in need is a friend indeed.

UserMedia.blogspot.com

**உயிர்கொடுப்பான் தோழன்.**

36. Self help is the best help.

**தன் கையே தனக்கு உதவி.**

37. Efforts never fail.

**முயற்சி திருவினையாக்கும்.**

38. Live and let live.

**வாழு; வாழவிடு.**

39. Think everybody alike.

**உன்னைப்போல் பிறரையும் நேசி.**

40. Manners make the man.

**ஒழுக்கம் உயர்வு தரும்.**

41. All is well that ends well.

**நல்ல தொடக்கம் நல்ல முடிவைத் தரும்.**

42. Misfortunes never come single.

**பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்.**

43. Do well what you have to do.

**செய்வன திருந்தச் செய்.**

44. Every tide has its ebb.

**ஏற்றம் உண்டானால் இறக்கம் உண்டு.**

## குறுவினா விடை

1. ஐகாரக் குறுக்கத்தை விளக்கு
   ஐகாரம் தன்னுடைய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிப்பது ஐகாரக் குறுக்கம் ஆகும்
   (எ.கா) **ஐ**வர் - 11/2 மாத்திரை
   வ**ளை**யல்
   பற**வை** - 1 மாத்திரை

2. ஔகாரக் குறுக்கத்தை விளக்குக
   ஔகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பது ஔகாரக் குறக்கம் ஆகும்
   (எ.கா) **ஔ**வையார் - 11/2 மாத்திரை

3. மகரக்குறுக்கம் - விளக்கு
   'ம்' என்னும் எழுத்து செய்யுளில் வரும்போது தனக்குரிய (1/2) அரை மாத்திரையிலிருந்து குறைந்து கால் மாத்திரையாக ஒலிப்பது
   (எ.கா) மருளு**ம்** - மருண்**ம்**
   போலு**ம்** - போன்**ம்**
4. சொல் என்றால் என்ன?
   ஒரு எழுத்து தனித்து நின்றோ பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும்
   (எ.கா) கை, பந்து
5. மூவகை மொழிகள் யாவை?
   தனி மொழி - அறம்
   தொடர் மொழி - அறம் செய்
   பொது மொழி - தாமரை
6. பொதுமொழி என்றால் என்ன?
   ஒருசொல் தனித்து நின்று ஒரு பொருளையும் தொடர்ந்து நின்று வேறு பொருளையும் தருவது
   (எ.கா) தாமரை - மலர்
   தா+மரை - தாவுகின்ற மான்

UserMedia.blogspot.com

7. வினைமுற்றைக் கொண்டு எவ்வெவற்றை அறியலாம்?
திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றை அறியலாம்

8. தெரிநிலை வினமைுற்று – விளக்குக.
செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறினையும் தெரிவிப்பது காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது
(எ.கா) **உழுதான்**

9. முற்றெச்சம் என்றால் என்ன?
ஒரு வினைமுற்று எச்சப்பொருளைத் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.
(எ.கா) படித்தனன், தேறினன்

10. ஒன்றொழிப் பொதுச்சொல் என்றால் என்ன?
உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவான சொற்கள் ஒரு பாலை விலக்கி மற்றொரு பாலைச் சுட்டுவது.
(எ.கா) வீட்டின் முன் ஐவர் கோலமிட்டனர்

11. இனங்குறித்தல் என்றால் என்ன?
ஒரு சொல் தன் பொருளையும் தனக்கு இனமான பொருளையும் சேர்த்துக் குறிப்பது
(எ.கா) வெற்றிலை தின்றான்.

12. அடுக்குத்தொடர் - இரட்டைக் கிளவிக்குரிய வேறுபாடுகள் யாவை?

| அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி |
|---|---|
| 1. சொற்கள் தனியே நிற்கும் | 1. ஒன்றுபட்டு நிற்கும் |
| 2. பிரித்தால் பொருள் தரும் | 2. பொருள் தராது |
| 3. இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வரும் | 3. இரண்டு முறை மட்டுமே வரும் |
| (எ.கா) வருக வருக | மடமட |

13. வினா எத்தனை வகைப்படும்? அவையாவை?
வினா ஆறு வகைப்படும்

| | |
|---|---|
| அறி வினா | கொடை வினா |
| அறியா வினா | கொளல் வினா |
| ஐய வினா | ஏவல் வினா |

14. உடன்பட்டுக் கூறும் விடையின் பெயரென்ன?
நேர் விடை
(எ.கா) செய்வாயா? என்ற வினாவிற்கு 'செய்வேன்' எனக் கூறுவது.

15. விடை எத்தனை வகைப்படும்? அவையாவை?
விடை எட்டு வகைப்படும்

| | |
|---|---|
| சுட்டு விடை | வினா எதிர் வினாதல் விடை |
| மறை விடை | உற்றது உரைத்தல் விடை |
| நேர் விடை | உறுவது கூறல் விடை |
| ஏவல் விடை | இன்மொழி விடை |

16. ஒரு பொருட்பன்மொழியை விளக்கு
ஒரு பொருளை தரும் பல சொற்கள் தொடர்வது
(எ.கா) நடு மையம், உயர்ந்தோங்கி

UserMedia.blogspot.com

17. உவமஉருபு என்றால் என்ன?
உவமை, உவமேயம் ஆகிய இரண்டிற்கும் இடையில் வருவது
(எ.கா) கிளி போலப் பேசினாள்

18. உவம உருபுகள் யாவை?
போல, புரைய, ஒப்ப, உறழ, அன்ன, இன்ன, மான, கடுப்ப, நேர, நிகர

19. விரியுவமை – தொகையுவமை விளக்குக
விரியுவமை – உவம உருபு வெளிப்படையாக வருவது
(எ.கா) தேன் போன்ற மொழி
தொகையுவமை – உவம உருபு மறைந்து வருவது
(எ.கா) தேன்மொழி

20. புணர்ச்சி என்றால் என்ன? அது எத்தனை வகைப்படும்?
நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் சேர்வது
புணர்ச்சி இரண்டு வகைப்படும்
இயல்பு புணர்ச்சி - வாழை + மரம் = வாழைமரம்
விகாரப் புணர்ச்சி - வாழை + பழம் = வாழைப்பழம்

21. திசைப்பெயர் புணர்ச்சி என்றால் என்ன?
திசைப்பெயரோடு திசைப்பெயரோ, பிற பெயர்களோ சேருவது
(எ.கா) வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
வடக்கு + மலை = வடமலை

22. மையீற்றுப் பண்புப்பெயர்கள் நான்கினைக் கூறு
சிறுமை, புதுமை, நன்மை, இளமை

23. செம்மொழி எவ்வாறு புணரும்
செம்மை + மொழி = ‘ஈறுபோதல்’ விதிப்படி
செம் + மொழி = செம்மொழி என்று புணர்ந்தது.

24. ‘வெற்றிலை’ – புணர்ச்சி விதி தருக
வெறுமை + இலை = வெறு + இலை (ஈறுபோதல்)
வெற்று + இலை (தன் ஒற்று இரட்டல்)
வெற்ற் + இலை (உயிர்வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும்)
வெற்றிலை (உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே)

25. வல்லினம் மிகும் இடங்கள் இரண்டினைக் கூறு
ய. தை + பொங்கல் = தைப்பொங்கல் (ஓரெழுத்து ஒருமொழி)
டி. சால + பசித்தது = சாலப்பசித்தது (சால, தவ – உரிச்சொல்)

26. வல்லினம் மிகா இடங்கள் இரண்டினைக் கூறு
ய. முருகா + கேள் = முருகாகேள்(விளி முன் மிகாது)
டி. கற்க + கசடற = கற்ககசடற (வியங்கோள் வினைமுற்று முன்மிகாது)
உ. இது + பாடம் = இதுபாடம்(அது, இது முன் மிகாது)

27. முதற்பொருள் என்பது யாது?
நிலமும், பொழுதும் முதற்பொருள் ஆகும்

28. அகத்திணைகள் யாவை?
அகத்திணைகள் ஏழு
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை

UserMedia.blogspot.com

29. ஐந்திணைகளுக்கும் உரிய பொழுதுகளைக் கூறு

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்முன்பனி | யாமம் |
| முல்லை | கார் | மாலை |
| மருதம் | ஆறு பெரும்பொழுதுகள் | வைகறை |
| நெய்தல் | ஆறு பெரும்பொழுதுகள் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில் | |
| | பின்பனி | நண்பகல் |

30. கருப்பொருள்கள் சிலவற்றைக் கூறு
தெய்வம், மக்கள், விலங்கு, பறவை, ஊர், உணவு, பண், பறை, யாழ், தொழில்

31. புறத்திணைகள் எத்தனை? அவை யாவை?
புறத்திணைகள்

| | |
|---|---|
| வெட்சி | கரந்தை |
| வஞ்சி | காஞ்சி |
| உழிஞை | நொச்சி |
| தும்பை | வாகை |
| பாடாண் | பொதுவியல் |
| கைக்கிளை | பெருந்திணை |

32. மதிற்போர் பற்றிய புறத்திணைகள் யாவை?
எயில் வளைத்தல் - உழிஞை
எயில் காத்தல் - நொச்சி

33. வாகைத்திணை விளக்கு
போரில் வெற்றி பெற்ற மன்னன் வாகைப்பூ சூடி மகிழ்வர்

34. பொருந்தாக் காமம் பற்றிய திணை எது?
பெருந்திணை

35. பா – எத்தனை வகைப்படும்? ஆவை யாவை?
பா நான்கு வகைப்படும்
வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா

# அணி

1. தற்குறிப்பேற்ற அணி
தன் + குறிப்பு + ஏற்றம்
இயற்கையின் மீது கவிஞர் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது
(எ.கா) போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி **வாரல்**
கொடி காற்றில் அசைவது இயற்கை அது கண்ணகி கோவலைனை மதுரைக்குள் **'வராதே'** எனக் கூறுவதாக இளங்கோவடிகள் தன் குறிப்பை ஏற்றிக் கூறியுள்ளார்.

2. வஞ்சப் புகழ்ச்சி அணி
புகழ்வது போலப் பழித்தல்
பழிப்பது போலப் புகழ்வர்
(எ.கா) தேவர் அனையர் கயவர்....
தேவரும் கயவரும் இணை எனப் புகழ்ந்து பின்னர் கயவர் தன் மனம் விரும்பியவாறு தீமையை செய்வர் என பழித்துள்ளார் திருவள்ளுவர்

UserMedia.blogspot.com

3. **இரட்டுற மொழிதல் அணி (அ) சிலேடையணி**

ஒரு சொல் இருபொருள்பட வருவது

இது செம்மொழி சிலேடை, பிரிமொழி சிலேடை என இரு வகைப்படும்

**செம்மொழி சிலேடை**

**வஞ்சியேன்** - வஞ்சி நாட்டைச் சேர்ந்தவன்
வஞ்சிக்க மாட்டேன்

**பிரிமொழி சிலேடை**

ஏற்று மின் / விளக்கை - விளக்கை ஏற்றுக
ஏற்று மின் விளக்கை - மின் விளக்கை ஏற்றுக

4. **சொற்பொருள் பின் வரு நிலையணி**

செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து ஒரே பொருளைத் தருவது

(எ.கா) எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு

விளக்கு – ஒளி என்ற ஒரே பொருளில் வந்துள்ளது

5. **சொல் பின்வரு நிலையணி**

செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருளைத் தருவது

(எ.கா) துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை

## துணைப்பாடம்

### 1. பரிதிமாற் கலைஞர்:

- பரிதிமாற் கலைஞரின் இயற்பெயர் **சூரிய நாராயண சாஸ்திரி**
- தமிழார்வம் கொண்ட **இயற்றமிழ்** மாணவர்களுக்குத் தன் வீட்டிலேயே சுவைப்பட பாடம் கற்பித்தார்.
- 1902ல் பட்ட வகுப்பில் **தமிழை நீக்கும் முடிவு** இவரால் கைவிடப்பட்டது
- **மணிப்பிரவாள நடையை** எதிர்த்தார்.
- **ரூபாவதி, கலாவதி** என்னும் நாடகங்களை எழுதினார்
- முதன் முதலில் தமிழை **உயர்தனிச்செம்மொழி** என்று அழைத்தவர் இவரே

### 2. மெல்ல மெல்ல மற!

- **கலமநாதன்** ஓயாமல் புகைபிடிப்பவன் **கோகிலா** இவன் மனைவி அவள் எவ்வளவு எடுத்துக் கூறியும் திருந்தவில்லை
- கமலநாதனின் நண்பன் **இராமலிங்கம்** இவனும் புகை பிடிப்பவன். இப்போது **புற்றுநோயால்** மருத்துவமனையில் இறந்து விடுகிறான்
- நண்பன் இராமலிங்கத்தின் மரணம் கமலநாதனைப் பெரிதும் **பாதித்தது**
இராமலிங்கதின் மனைவி சியாமளாவின் விதவைக் கோலமும் தந்தையற்ற குழந்தைகளின் ஏக்கமும், அழுகையும் கமலநாதனை **யோசிக்கச்செய்தது.**
- இப்போது கமலநாதன் இனி புகை பிடிப்பதில்லை என்று **முடிவு** செய்து அதற்கான முயற்சியில் இறங்கினான்.

UserMedia.blogspot.com

- கோகிலாவும் அவனுக்கு **உதவுவதாகக்** கூறினாள்

**புகை உடலுக்குப் பகை**

3. **அன்றாட வாழ்வின் சட்டங்கள்:**

**நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்:**

சந்தையில் விற்கப்படும் பொருள்களில் குறைகள் இருந்தால் அக்குறைகளைத் தீர்த்து வைக்குமாறு இச்சட்டத்தின் மூலம் நீதிமன்றம் சென்று நம் உரிமையைப் பாதுகாக்கலாம்.

**தகவல் அறியும் உரிமைச் சட்டம்:**

- நாம் செலுத்திய வரிப்பணம் எப்படி செலவாகிறது என அறிவதை முன்னிருத்தியதே தகவல் அறியும் உரிமைச் சட்டம்
- இதற்கு தனி விண்ணப்பம் இல்லை
- ஏழைகளுக்குக் கட்டணம் இல்லை

**போக்குவரத்துச் சட்டங்கள்:**

- சாலை விதிகளை மீறுவோர் மீது செலுத்தப்படும் சட்டம் போக்குவரத்துச் சட்டமாகும்

**குழந்தைத் தொழிலாளர் தடைச்சட்டம் :**

பெற்றோர் தம் வறுமைக்காக குழந்தைகளை வேலைக்கு அனுப்புகிறார்கள். குறைந்த ஊதியத்தில் அதிக உழைப்பை முதலாளிகள் சுரண்டுகிறார்கள். இதைத் தடுப்பதே குழந்தைத் தொழிலாளர் தடைச்சட்டம்

4. **அண்ணா**

- பேரறிஞர் அண்ணா **முதலமைச்சர்** ஆனப்பிறகு எழுதிய பொங்கல் வாழ்த்து
  சென்ற பொங்கலன்று மக்களோடு இருந்து அவர்கள் மகிழ்சியில் பங்கேற்ற நான் இப்போது அதைக் காண இயலாமல் **வருந்துகிறேன்.**
- உழைப்பின் **பெருமை** தமிழர் **வாழ்ந்த நேர்த்தி** இதனை அறிய உதவும் நாள் பொங்கல்.
- நிலமகளும், உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயன்று பெறு! என்று **ஆணையிடுகிறாள்.**
- நலிந்தோரும் மகிழ்ந்திருக்கும் **நன்னாள்**
- பொங்கல் நாளில் **இன்பம், புதுமை, பொலிவு** ஆகியவை பொங்கி பெருகிடுக! என்று **வாழ்த்தி** கடிதத்தை முடிக்கிறார்.

5. **எம்.ஜி.ஆர்:**

**கோபாலமேனன்-சத்தியபாமா** தம்பதியினருக்கு 5வது மகனாக **14.01.1917**ல்
இலங்கையிலுள்ள **கண்டியில்** எம்.ஜி.ஆர் பிறந்தார்.

சிறு வயதில் வறுமையின் காரணமாக மேடைநாடகங்களில் சிறுசிறு வேடங்களில் நடித்து, கடின உழைப்பினால் **கதாநாயகனாக** உயர்ந்தார்

**நடிப்பும், அரசியலும்** இவரது இரு கண்கள்
**'புரட்சி, நடிகர்', 'மக்கள் திலகம்'** என்று மக்களால் அழைக்கப்பட்டார்

அண்ணாவின் **'இதயக்கனி'** ஆனார்

**சத்துணவுத் திட்டத்தைக்** கொண்டுவந்தார்

UserMedia.blogspot.com

**‘பாரத்’** பட்டத்தையும், **‘பாரத ரத்னா’** விருதையும் பெற்றார்.
**24.12.1987** அன்று மறைந்தார்.

**வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி**
**மக்கள் மனதினில் நிற்பவர் யார்?**

## 6. குறட்டை ஒலி

செல்வச் செழிப்பு மிகுந்த, கொடுக்க மனமற்ற, அரக்க மனம் படைத்த, குழந்தைகளற்ற கணவன்-மனைவியார் வீட்டின் **வடபகுதியில்** குடியிருந்தனர்

வறுமை வாட்டினாலும் இரக்கமனம் படைத்த கணவன்-மனைவி, 1பாட்டி, 6 குழந்தைகள், 1 நாய் இப்போது 7வது குழந்தை என்று வாழ்ந்து வரும் குடும்பம் வீட்டின் **தென்பகுதியில்** குடியிருந்தனர்.

நாய் **5 குட்டிகளை** ஈன்றது. தாய் நாய் காணாமற் போகவே குட்டிகள் **பசியால் கத்தின.** பால் வாங்கி ஊற்றவோ இவர்களிடம் **பணம் இல்லை**

அரக்கமனம் கொண்டோர் நன்றாக உண்டு, **குறட்டை விட்டு** உறங்கிக் கொண்டிருந்தனர்

ஆனால் இரக்கமனம் கொண்ட தாயோ, தன் **குழந்தையின் பாலையே** பஞ்சில் நனைத்து குட்டிகளுக்குக் கொடுத்து அவற்றின் **பசியை ஆற்றினாள்.**

## அலகிடுதல்

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| ஒழுக்/கம் / | நிரை, நேர் | புளி மா |
| விழுப் /பம் | நிரை, நேர் | புளி மா |
| தர/லான் | நிரை, நேர் | புளி மா |
| ஒழுக் /கம் | நிரை, நேர் | புளி மா |
| உயி/ரினும் | நிரை, நிரை | கருவிளம் |
| ஓம் /பப் | நேர், நேர் | தேமா |
| படும் | நிரை | **மலர்** |

## ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க:

**1.கீழக்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

1) “ டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே. பட் நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய் டாடி? என்னோட ப்ரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்கு வரச் சொல்லிக் கால் பண்ணியிருக்கிறேன்.” “சன்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்கிறதே, டோண்ட் வொர்ரி, டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹேப்பி தானே.”

**விடை:** அப்பா, வருகிற ஞாயிறு எனக்குப் பிறந்த நாள். ஆனால், நீங்க இன்னும் எனக்கு பிறந்தநாள் ஆடை எடுக்கவில்லையே, ஏன் அப்பா? என்னுடைய நண்பர்களையெல்லாம் வீட்டிற்கு வரச்சொல்லி அழைப்பு விடுத்திருக்கிறேன். ஞாயிறு வருவதற்கு இன்னும் ஆறு நாட்கள்

UserMedia.blogspot.com

இருக்கிறதே. கவலைப்படாதே நாளை மாலை கடைக்குப் போகலாம் இப்போது உனக்கு மகிழ்ச்சி தானே!

2) சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே? வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனால்தான் லேட். சரி, சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கெட் கிடச்சுதா? பஸ் டென் தர்டிக்கு வரும் லாஸ்ட் வீக்கே ரிசர்வ் செய்தாச்சு.

**விடை:**சுரேஷ் என்ன ஆயிற்று? ஏன் தாமதமாய் வருகிறாய்? வழியில் ஒரே போக்குவரத்து நெருக்கடி அதனால்தான் தாமதம். சரி சரி பேருந்து எத்தனை மணிக்கு வரும். பயணச்சீட்டு கிடைத்ததா? பேருந்து பத்து முப்பது மணிக்கு வரும். சென்ற மாதமே முன்பதிவு செய்தாயிற்று.

3) பள்ளியிலிருந்து வீட்டிற்குள் நுழைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கை தூக்கிப்போட்டு விட்டு, ‘‘மம்மி வாட்டர்’’ என்று குரல் கொடுத்தான். பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய்? கை கால்களை வாஷ் செய்து கொண்டு வா, சூடாக உனக்குப்பிடித்த டிபன் செய்து வைத்திருக்கிறேன். போய் யூனிபார்ம் மாற்றிக் கொண்டு வா என்றாள், அவன் தாய். ‘‘போம்மா’’ என்று கூறிக்கொண்டு பேனைச் சுழலவிட்ட பாரி, டிவியைப் போட்டான். ‘‘ஸ்கூல்விட்டு வந்தவுடன் ஏதற்கு டிவி? ஹோம்ஒர்க் செய்துவிட்டு அப்புறம் பார்க்கலாம்’’, என்றாள் அவன் தாய்.

**விடை:** பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்து நுழைந்த பாரி தன் பள்ளிப்பையைத் தூக்கிப் போட்டு விட்டு ‘‘அம்மா’’ குடிநீர் என்று குரல் கொடுத்தான். பள்ளியிலிருந்து வந்தவுடன் ஏண்டா இப்படிக் கத்துகிறாய். கை, கால்களை சுத்தம் செய்து கொண்டு வா. சூடாக உனக்குப் பிடித்த சிற்றுண்டி செய்து வைத்திருக்கிறேன். போய், சீருடை மாற்றிக்கொண்டு வா, என்றாள் அவன் தாய். போம்மா என்று கூறிக்கொண்டு மின்விசிறியைச் சுழலவிட்ட பாரி, தொலைக்காட்சியை இயக்கினான். ‘‘பள்ளிவிட்டு வந்தவுடனே எதற்கு தொலைக்காட்சி? வீட்டுப் பாடம் செய்து விட்டு அப்புறம் பார்க்கலாம், என்றாள் அவன் தாய்.

**2. அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றும் பயிற்சியை மாணவர்களுக்கு அளிக்கவும்**

**3. மொழியாக்கம்**

1. Trees are very useful to us. They give us, timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil seeds of some trees. The leaves and fruit of some trees are used to prepare medicines.

   மரங்கள் நமக்கு மிகவும் பயனளிக்கின்றன. மரக்கட்டையும், விறகையும் மரங்கள் தருகின்றன. நாற்காலிகள் மேசைகள் மற்றும் பல கலைப் பொருள் செய்ய மரக்கட்டை உதவுகிறது. சில விதைகளிலிருந்து எண்ணெய் கிடைக்கிறது. சில மரங்களின் இலை, கனி ஆகியவை மருந்து தயாரிக்கப் பயன்படுகின்றன.

2. Early to bed and early to rise make a man healthy, wealthy and wise. The early riser has more time and energy to prepare for the day’s work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study. As the mind is fresh, even a difficult study is made easy.

   ‘‘ முன் தூங்கி முன் எழுதல்’’ ஒருவனை உடல் நலமுடையவனாக, அறிவு உடையவனாக ஆக்கும். தாமதமாய் எழுபவனை விட அதிகாலையில் எழுபவனுக்கு அன்றாட வேலைகளைக் கவனிக்க அதிக நேரமும், சக்தியும் கிடைக்கிறது. அவன் தன்னை புத்துணர்ச்சி உடையவனாகவும், சுறுசுறுப்பு உடையவனாகவும் உணர்கிறான். பாடம் படிக்க அதிகாலை நேரமே உகந்தது. மனம் தெளிவாக இருப்பதால் கடினமான பாடப்பகுதி கூட எளிதாகிறது.

## பகுதி - 4

**1. கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக**

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலி யெழுப்பியவாறே தம்தம் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்த விடியற்காலை நேரத்தில் குமரன்....

(அல்லது)

**2. எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதிப் பழகுக**

1. மழை 2. கடல் 3. பள்ளி
4. வானம் 5. இயற்கைக் காட்சி

UserMedia.blogspot.com

எடுத்துக்காட்டாக ஒருதலைப்பு இங்கே கொடுக்கப்படுகிறது. இதனைப் போல் நீங்களும் எழுதிப் பழகுங்கள்.

**இயற்கைக் காட்சி**

அழகெலாம் ஆக்கி மாந்தர்
அகத்தெலாம் அவற்றைத் தேக்கி
கழிபெரும் உவகை யூட்டி
கண்பெற்றுப் பயன்உ ணர்த்தும்
அழிவிலா இயற்கை யன்னை
அரங்கேறும் காலைப் போதை
எழுதிடச் சொற்கள் இல்லை
இளங்காலைப் பொழுதே வாழி.

பகுதி – 5.

3. கீழுள்ள பாடலைப் படித்துணர்ந்து அதன் மைக்கருத்தினை எழுதுக இப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்து எழுதுக.

**மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்**
**மனேபாவம் வானைப்போல் விரிவ டைந்து**
**தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கி**
**சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்**
**இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்**
**இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை**
**புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்**
**புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.**

--- பாரதிதாசன்.

1. **மையக்கருத்து:**
மனித நேயமும் மக்கள் ஒருமைப்பாடும் ஓங்க நன்நெறி தரும் புலவர்கள் இயற்றிய புத்தகச் சாலைகள் நாட்டில் அமைதல் வேண்டும்.

2. **திரண்ட கருத்து:**
மனிதர்கள் அன்புடன் வாழும் மனநிலையைப் பெற வேண்டும். தனிமனித அறியாமை இருளை நீக்கவும். அனைவரும் சமம் என்று எண்ணும் உயர்ந்த நோக்கமும் வேண்டும். அதற்கு பெரியோர்கள் கூறிய சிந்தனைகள் அடங்கிய புத்தகச் சாலைகள் நாடெங்கும் பெருக வேண்டும்.

3. **அணிநயம் :**
வானைப் போல் விரிவடைந்து என்ற தொடரில் போல என்னும் உவம உருபு வந்து அழகு செய்வதால் இப்பாடலில் உவமை அணி பயின்றுள்ளது.

4. **எதுகை:**
**மனி**தரெலாம்
**தனி**மனித
**இனி**தினிதாய் -- இச்சொற்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து
**புனி**தமுற்று எதுகைச் சுவை தந்தது.

5. **மோனை** : **ம**னிதரெலாம்
**ம**னோபாவம் -- இது போன்று ஒவ்வொரு அடியிலும் மோனைச் சுவை பெற்று வந்துள்ளது.

UserMedia.blogspot.com

# பகுதி – 6

1. படிவத்தை நிரப்புக

   1. வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம்

............ கிளை நாள்............

இடம்............

சேமிப்புக் கணக்கெண்............

பெயர்............

ரூபாய்............ ரூ.

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி/கிளை | தொகை ரூ, |
|---|---|---|
| | | |

காசோலை விவரம்:

தொகை

காசாளர் எழுத்தர் / மேற்பார்வையாளர்

............ கிளை நாள்............

இடம்............

சேமிப்புக் கணக்கெண்............

நிலையான கணக்கெண் (PAN)

பெயர்............ ரூ.

ரூபாய்............

காசோலை விவரம்: பண விவரம் :

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி/கிளை | தொகை ரூ, |
|---|---|---|
| | | |
| | | |

செலுத்துநர் கையொப்பம்

| நாள் | தொகை |
|---|---|
| 1000 × | |
| 500 × | |
| 100 × | |
| 50 × | |
| 20 × | |
| 10 × | |
| 5 × | |
| காசுகள் | |
| மொத்தம் | |

UserMedia.blogspot.com

## 2. வங்கிக் கணக்கிலிருந்து பணம் எடுக்கும் படிவம்.

பதித்தவர். …………

பேரேடு :

நாள்.

இந்த ஆணைப் படிவத்துடன் கணக்குப் புத்தகம் இணைக்கப்பட வேண்டும்.

சேமிப்பு வங்கி கணக்கு எண் : …… ……. …. 20….

கணக்கு வைத்திருப்போர் பெயர்: ……………………………

…………... வங்கி ………………. எனக்கு அல்லது இதனைக் கொணர்பவருக்கு

ரூபாய் ……………………………………………………………………….. வழங்குக

| ரூ |
| --- |
| |

இப்பணம் எடுக்கும் சீட்டு மூலமாக கணக்கு வைத்திருப்பவரைத் தவிர மற்றவருக்கு ஆயிரம் ரூபாய் வரம்பு வரை பணம் கொடுக்கப்படும்.

கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம்.

அலை பேசி எண் :

UserMedia.blogspot.com

सी. एम./CM-257/T. 1106/टी/T

தெற்கு ரயில்வே

## முன்பதிவு/ரத்து செய்யும் விண்ணப்ப படிவம்

நீங்கள் மருத்துவராயிருந்தால்,தயவு செய்து பெட்டியில் (✓) செய்யவும் (நீங்கள் அவசரத்திற்கு உதவ விரும்பினால்) ☐

மூத்த குடிமக்கள் சலுகை தேவைப்பட்டால் " தேவை/இல்லை " என்று அதற்குரிய பெட்டியில் எழுதவும். இச்சலுகை பெற விரும்பினால், வயது அத்தாட்சி சான்றிதழ் ஒன்றை பயணத்தின்போது எடுத்துச் செல்ல வேண்டும். (தவறினால் இரயில்வே விதிகளின்படி உரிய அபராதம் விதிக்கப்படும்) ☐

உங்கள் பயணம் உயர்வகுப்புக்கு மேம்படுத்தப்படலாமா ? தேவை/இல்லை என்று எழுதவும் (உங்கள் விருப்பத்தை குறிப்பிடத் தவறினால் முழுக் கட்டண பயணிகளுக்கு இச்சலுகை தன்னிச்சையாக வழங்கப்படும்). ☐

நீங்கள் தனிமையில் பயணிக்கும் கர்ப்பிணி பெண் எனில், இங்கு (✓) குறியிடவும் ☐

வண்டி எண்/பெயர்................................................பயண தேதி..............................

வகுப்பு..............................படுக்கை/உட்காரும் எண்ணிக்கை..............................

புறப்படும் இடம்................................................சேரும் இடம்..............................

ஏறும் இடம்................................................

| வ. எண். | பெயர் (15 எழுத்துக்களுக்கு மிகாமல்) | பால் ஆ/பெண் | வயது | பயணச்சலுகை உரிமை எண் | விருப்பம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | கீழ் படுக்கை/ |
| 2. | | | | | நடு படுக்கை/ மேல் படுக்கை |
| 3. | | | | | .................. சைவம்/ |
| 4. | | | | | அசைவம் |
| 5. | | | | | (இராஜதானி/ சதாப்தி |
| 6. | | | | | விரைவு வண்டி) |

ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் விபரம் (பயணச்சீட்டு வழங்கப்பட மாட்டாது)

| வ. எண். | பெயர் | பால் | வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |

## தொடர் பயணம்/திரும்பும் பயண விவரங்கள்

வண்டி எண்/பெயர்................................................பயண தேதி..............................

வகுப்பு..................புறப்படும் இடம்..............................சேரும் இடம்..............................

விண்ணப்பதாரர் பெயர்................................................

விலாசம்................................................

................................................

தொலைபேசி எண்................................................

..............................

கையொப்பம்

---

### அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

விண்ணப்ப படிவ எண்..............................பயணச்சீட்டு எண்..............................

இருக்கை எண்..............................வசூலிக்கப்பட்ட தொகை ரூ..............................

ரயில்வே அலுவலர் கையொப்பம்..............................

குறிப்பு :—
(1) ஒரு படிவத்தில் அதிகபட்சம் 6 பயணிகள் பெயர்கள் மட்டும் எழுதவும்.
(2) ஒருவர் ஒரு விண்ணப்பபடிவம் மட்டும் கொடுக்க வேண்டும்.
(3) கவுண்ட்டரை விட்டு போகும்போது பயணச்சீட்டு மற்றும் மீதி தொகையை சரிபார்க்கவும்.
(4) முறையாக நிரப்பபடாத விண்ணப்பபடிவம் ஏற்க இயலாது.
(5) விரும்பும் இருக்கை இருக்கும் இடவசதியைப் பொறுத்து அமையும்.
(6) ஒரே பயணச்சீட்டில் பதிவு செய்த பயணிகள் அனைவருக்கும் வகுப்புமேம்பாட்டின்போது, இருக்கைகள் அருகருகே கிடைக்கலாம் கிடைக்காமலும் போகலாம்.
(7) கர்ப்பிணி பெண் தனிமையில் பயணிப்பதானால் மருத்துவச்சான்றிதழ் அளித்து, தாழ்நிலை படுக்கை வசதியை பெற்றுக்கொள்ளலாம்.

UserMedia.blogspot.com

பகுதி 7

**கீழக்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க**

மாறன், வளவனின் நெருங்கி நண்பன். சில நாட்களாக உடல்நலம் இல்லாமல் இருந்த மாறன் நேற்று எதிர்பாராத விதமாக மாடிப் படியிலிருந்து கீழே விழுந்ததில் முற்றிலுமாக தன் நினைவை இழந்து விட்டான். மாறனின் நிலையைக்கண்டு வளவன் மிகவும் மன வருத்தமடைந்தான். உணவு உண்பதற்குக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மனவருத்தம் பெற்றோருக்குத் தெரிந்திருந்தது. அவர்கள் எவ்வளவுதான் கூறினாலும் அவனால் நண்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கி கொள்ள இயலவில்லை.

1. வளவன், ஏன் மனவருத்தத்தோடு இருந்தான்?
2. நமக்குத் தாங்கமுடியாத துன்பம் ஏற்படும் போது அதிலிருந்து மீள வழி யாது?
3. இச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?

ஆ) விழிமாற்று திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடு நேரமாகக் காத்துக் கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் கடந்து செல்கின்றனர். ஆனால் அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

1. இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?
2. பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?

**(இது போல வேறு சில பகுதிகளைக் கொடுத்து பயிற்சி அளிக்கவும்)**

UserMedia.blogspot.com

# கடிதம்

1. <u>மாற்றுச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பம்</u>

அனுப்புநர்

10253
3, வ.உ.சி. நகர்,
திருச்சி.

பெறுநர்

உயர்திரு. தலைமையாசிரியர் அவர்கள்
அரசு உயர்நிலைப்பள்ளி,
திருச்சி -1

ஐயா,

வணக்கம்

பொருள் : மாற்றுச் சான்றிதழ் வேண்டுதல்

நான் தங்கள் பள்ளியில் பத்தாம் வகுப்பு 'இ' பிரிவில் படித்து தேர்ச்சி பெற்றுள்ளேன். நான் மேல்நிலைக் கல்வியைத் தொடர மாற்றுச்சான்றிதழ் தேவைப்படுகிறது.

எனவே, எனக்கு மாற்றுச் சான்றிதமுடன் நடத்தைச் சான்றிதழையும் சேர்த்துத் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

நன்றி

இப்படிக்கு,
தங்கள் பணிவுள்ள மாணவன்
10253
பெற்றோர் கையொப்பம்

திருச்சி 1
21.07.12
உறைமேல் முகவரி

| |
|---|
| பெறுநர்<br>உயர்திரு. தலைமையாசிரியர் அவர்கள்<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>திருச்சி -1 |

**2.குடிநீர் வசதி வேண்டி விண்ணப்பம் :**

அனுப்புநர்

10253
25, குமரன் தெரு,
ஈரோடு.

பெறுநர்

உயர்திரு. ஆணையர் அவர்கள்
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு.

UserMedia.blogspot.com

பெருமதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்

பொருள் : குடிநீா் வசதி வேண்டுதல்.

எங்கள் வேலன் தெருவில் 300 குடும்பங்கள் உள்ளன. எங்களுக்கு தேவையான குடிநீரைப் பெற 4 தெருக்களை கடந்து நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.

'நீரறம் நன்று' என்பதற்கேற்ப எங்களுக்கென்று குடிநீர்க் குழாய் இணைப்புகளைக் கொடுத்து எங்கள் துயரைத் துடைக்க வேண்டுகிறேன்.

நன்றி

இப்படிக்கு,
தங்கள் பணிவுள்ள மாணவன்
10253

குமரன்தெரு, ஈரோடு
21.07.12
உறைமேல் முகவரி

பெறுநா்

உயா்திரு. ஆணையா் அவா்கள்
ஈரோடு மாநகராட்சி,

| | |
|---|---|
| அ) பேருந்து வசதி - | உயா்திரு. மேலாண்மை இயக்குநா் அவா்கள்<br>அரசுப் போக்குவரத்துக் கழகம், திருச்சி |
| ஆ) சாலை வசதி -<br>மின் வசதி | உயா்திரு ஆணையா் அவா்கள்,<br>திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,<br>திருச்சிராப்பள்ளி -1 |

UserMedia.blogspot.com

## 3. வேலை வேண்டி விண்ணப்பம் :

அனுப்புநர்
10130
25, பாரதி நகர்,
தஞ்சாவூர்

பெறுநர்
கலைவாணி கல்வி நிலையம்,
தல்லாகுளம்,
மதுரை – 2.

பெருமதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்

தங்களது கல்வி நிலையத்தின் விளம்பரத்தைப் பார்த்தேன். நான் கடந்த ஆண்டு 10-ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றேன். எனக்கு இந்த பணியைக் கொடுத்தால் கடமையுணர்வுடன் பணியாற்றுவேன் என உறுதியளிக்கிறேன்.

இத்துடன் எனது தன்விவரக் குறிப்பினை இணைத்துள்ளேன்.

நன்றி

இப்படிக்கு,
உண்மையுள்ள,
10130

தஞ்சாவூர்.
21.07.12
**பின் இணைப்பு :**

## தன் விவரக் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | 10130 |
| 2. | பிறந்த தேதி மற்றும் வயது | : | 04.12.1995 / 18 |
| 3. | பாலினம் | : | ஆண் |
| 4. | தந்தை பெயர் | : | கந்தன் |
| 5. | முகவரி | : | 25, பாரதி நகர், தஞ்சாவூர் |
| 6. | 10ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் | : | 405 / 500 |
| 7. | தாய்மொழி | : | தமிழ் |
| 8. | பயின்ற மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம் |
| 9. | தட்டச்சு | : | இளநிலை, சுருக்கெழுத்து |
| 10. | கணினி | : | அடிப்படை |

UserMedia.blogspot.com

## பொதுக்கட்டுரைகள்

### 1. சிக்கனமும் சிறுசேமிப்பும்

**முன்னுரை:**

**'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை'** என்றார் வள்ளுவர். அப்பொருளின் சிறப்பை உணர்ந்து சேமிப்பது அவசியம். சிக்கனம் இருந்தால் தான் சேமிக்க முடியும்.

**சிக்கனம்**

**"சிக்னம் தேவை இக்கணம்"** தேவைக்கும் செலவு செய்யாமல் இருப்பது கருமித்தனம். தேவைக்கு மேல் செலவு செய்வது ஆடம்பரம். தேவைக்கு மட்டுமே செலவு செய்வது சிக்கனமாகும்.

**வரவுக்குள் செலவு:**

**'விரலுக்கு தகுந்த வீக்கம்'** என்பார்கள். நமது வரவு எவ்வளவு என அறிந்து திட்டமிட்டு செலவு செய்ய வேண்டும். தேவையில்லாத ஆடம்பர செலவுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

**சேமிப்பின் அவசியம் :**

எறும்பு, தேனீ போன்ற சிறிய உயிர்கள் கூட எதிர்காலத்திற்கென்று சேமிக்கின்றன. **'பணம் இல்லாதவன் பிணம்'** என்பதை அறிந்து நமது வருவாயில் ஒருசிறு தொகையினையாவது சேமிக்க வேண்டும். அது நம் எதிர்காலத்தை வளமாக்கும்.

**சேமிப்பில் கவனம் :**

பாடுபட்டுத் தேடிய பணத்தை பாதுகாப்பற்ற இடங்களில் சேமிக்கக் கூடாது. நமது அரசின் சிறுசேமிப்பு நிலையங்கள், அரசுடைமை வங்கிகள், அஞ்சலகங்களில் சேமிக்க வேண்டும். நமது சேமிப்பு நாட்டின் தேவைகளைச் சந்திக்க உதவும்.

**முடிவுரை**

சேமிப்பு நம் மனதை தூய்மைப்படுத்தி மகிழ்ச்சிப்படுத்தி எதிர்கால வாழ்வை ஒளிமயமாக்கிடும். **'சிறு துளி பெரு வெள்ளம்'** என்பது போல நாம் சிறுக சிறுக சேமித்து வளம்பெருக வாழ்வோம்.

**"சிக்கனம் வீட்டைக் காக்கும்
சேமிப்பு நாட்டைக் காக்கும்"**

### 2. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

**முன்னுரை**

நம்மைச் சுற்றியிருக்கும் இடங்களையும் இயற்கைச் சூழ்நிலைகளையும் மாசுப்படாமல் பாதுகாப்பதே சுற்றுச் சூழல் பாதுகாப்பாகும். நம்மைக் காக்கும் பூமியை நாமும் பாதுகாக்க வேண்டும். சுற்றுச் சூழல் பாதுகாப்பின் அவசியம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நிலத்தூய்மை**

இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள் போன்றவற்றை விளைநிலங்களில் பயன்படுத்துவதால் மண் வளம் மாசுபடுகிறது. வேளாண்மையில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களை உற்பத்தி செய்தால் மண் வளத்தைப் பாதுகாக்க முடியும்.

**நீர்த் தூய்மை**

நோய்கள் பெருக மாசுபட்ட நீரே காரணம். கழிவு நீரையும், இரசாயனக் கழிவு நீரையும் நீர்நிலைகளில் கலப்பதால் நீர் மாசுபடுகிறது. தொழிற்சாலைகளின் கழிவு நீரை மறுசுழற்சி செய்ய வேண்டும். வீட்டுக் கழிவு நீரைச் சரியான முறையில் வெளியேற்ற வேண்டும்.

**காற்றுத் தூய்மை**

தொழிற்சாலை புகை, வாகனப் புகை போன்றவற்றால் வளிமண்டலம் மாசுபடுகிறது. அதிக அளவில் மரங்களை வளர்ப்பதன் மூலம் காற்றைத் தூய்மையாக்க முடியும்.

**முடிவுரை:** .

UserMedia.blogspot.com

குப்பைகளைக் கண்ட இடங்களில் கொட்டக் கூடாது. மறுசுழற்சி செய்ய முடியாத நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடாது.

"சுற்றுச் சூழல் காப்போம்!
நோயின்றி வாழ்வோம்!!"

## 3. காலத்தை வெல்லும் கணினி.

**முன்னுரை**

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்புகளில் ஒன்று கணினி. இது ஒரு நொடியில் மில்லியன் கணக்குகளைச் செய்து காட்டும். கணினி இன்று எல்லாத் துறைகளிலும் பயன்படுகிறது.

**தோற்றம்**

கி.பி. 1883 வடிவமைப்பு – சார்லஸ் பாபேஜ்
கணித செயல்பாட்டிற்குத் தேவையான கட்டளைகளை வடிவமைத்தவர் - லேடி லவ்லேஜ்
கணினியின் தந்தை சார்லஸ் பாபேஜ்

**வளர்ச்சி**

எண் இலக்க கணினி - ஹர்வார்டு மார்க் - 1
மீத்திறன் கணினி – அமெரிக்கா, ஜப்பான்

**வகைகள்**

பல்லூடக கணினி
மடிக் கணினி
கையடக்க கணினி

**இணையம்:**

உலகில் உள்ள கணினிகள் அனைத்தையும் இணைக்க பயன்படுவது இணையம்

**இணைய வகைகள்**

| | | |
|---|---|---|
| குறும்பரப்பு வலைப்பின்னல் | - | LAN |
| அகன்ற பரப்பு வலைப்பின்னல் | - | WAN |
| வையக விரிவு வலை | - | WWW |

**இணையதள வசதி**

இணைய சேவைக்கு உரியவரிடம் தனி கணக்குத் தொடங்கி கணினியை இணையதளத்துடன் இணைக்க வேண்டும். பல செய்திகள் அழியாமல் காக்க இது பயன்படுகிறது.

**கணினி வழிக் கல்வி**

கணியியைப் பயன்படுத்தி கற்கும் முறையே கணினி வழிக் கல்வி ஆகும்.

**பயன்படும் இடங்கள்:**

வங்கிகள், உணவகங்கள், வணிக வளாகம், கல்விநிலையங்கள், பேருந்து நிலையங்கள், புகைவண்டி நிலையங்கள்.

**உள்ளங்கையில் உலகம்**

கணினியும், இணையதளமும் உலகத்தையே நம் உள்ளங்கையில் கொண்டுவந்துள்ளன.

முடிவுரை :

மனிதனின் கண்டுபிடிப்பை மனித சமுதாய வளர்ச்சிக்கு மட்டும் பயன்படுத்த உறுதி எடுப்போம்.

## 4. சாலை விதிகள்

UserMedia.blogspot.com

**முன்னுரை**

எங்கு பார்ப்பினும் நான்குவழிச் சாலை. சுாலை மேம்பாட்டுப் பணிகள். ஆனால் நாளிதழிலோ நாள்தோறும் தொடரும் சாலை விபத்துகள். காரணம் என்ன? சாலை விதிகளைக் குறித்த விழிப்புணர்வு இல்லாமையே ஆகும்.

**சாலை விதிகள்**

சாலையில் செல்லும் அனைவரும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளே சாலை விதிகள் ஆகும்.

**சாலை விதிகளை மதி – மாறுமே நம் தலைவிதி**

**அறிவிப்பு விளக்குகள்:**

சாலைகளில் உள்ள அறிவிப்பு விளக்குகள் சிவப்பு, மஞ்சள், பச்சை என ஒளிரும். அது நில், கவனி, செல் என அறிவிப்பதற்கு கீழ்ப்படிய வேண்டும். அம்புக்குறிகள் குறிப்பிடும் அறிவிப்புகளை கவனித்துச் செல்லுதல் வேண்டும்.

**விபத்து ஏற்படக் காரணம்**

மது அருந்தியவர்கள், போதை பொருட்களை உட்கொண்டவர்கள், தூக்கமின்றி பல நாட்கள் வண்டி ஓட்டுபவர்கள், கைபேசியில் பேசிக்கொண்டே வண்டி ஓட்டுபவர்களாலேயே விபத்துகள் ஏற்படுகின்றன.

**தலைக்கவசம் :**

**'தலைக்கவசம் உயிர்க்கவசம்'** எதிர்பாராமல் விபத்து ஏற்படும்போது தலைக்குச் சேதம் ஏற்படாமல் காக்கும் பாதுகாப்பு கவசமே தலைக்கவசம் ஆகும்.

**ஓட்டுநர் உரிமம்:**

ஓட்டுனர் உரிமம் பெறாதவர், சிறுவர் ஆகியோரை வண்டி ஓட்ட அனுமதிக்கக் கூடாது. முறையின்றி ஓட்டுநர் உரிமம் பெறவும் கூடாது.

**கைப்பேசி**

வண்டி ஓட்டும்போதும் சாலையைக் கடக்கும்போதும் கைப்பேசியில் பேசுவதைத் தவிர்க்கவேண்டும். இது கவனச் சிதறலை ஏற்படுத்தும்.

**முடிவுரை :**

விலையில்லா நம் உயிரைத் தலைவிதி என்று சொல்லி இழந்து போகாமல் சாலைவிதிகளைப் பின்பற்றி நலமுடன் பாதுகாப்பாக வாழ்வோமாக!

## 5.மழைநீர் சேகரிப்பு

**முன்னுரை**

மழை பெய்யும் காலங்களில் மழைநீர் வீணாகாமல் நிலத்துக்கு அடியில் சேமிப்பதையே மழைநீர் சேகரிப்பு என்கிறோம். மழைநீர் சேகரிப்பின் அவசியம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பற்றாக்குறை ஏன்?**

மக்கட்தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப நீர்நிலைகள் பெருகவில்லை. கிடைத்த நீரையும் நாம் சரியான முறையில் பாதுகாக்கவில்லை. எனவே தான் கோடைக் காலங்களில் கடும் வறட்சி நிலவுகிறது.

**மழைநீர் சேகரிப்பு**

நிலத்தடி நீர்வளம் குறைந்து விட்டது. போதிய அளவு மழையும் பெய்வதில்லை. மழை பெய்யும் காலத்தே வீணாகும் மழைநீரை பூமிக்கடியில் சேகரிக்க வேண்டும். வீடுகளில் தொட்டிகள் அமைத்தும், நீர்நிலைகளை ஆழப்படுத்தியும், புதிய அணைகள் கட்டியும் மழைநீரைச் சேமிக்கலாம்

**மழை நீர் சேகரிக்கும் முறைகள்:**

UserMedia.blogspot.com

ஆறு குளங்களில் தேக்கி ஆழ்குளாய் கிணறு அமைத்து வீடுகளில் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைத்து. மழை நீரைச் சேமிக்கலாம்.

**பயன்கள்**

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், கடல்நீர் நிலப்பகுதியில் உட்புகுவதைத் தடுக்கவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும், எதிர்காலத் தலைமுறையின் தண்ணீர் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யவும் மழைநீரை சேகரிக்க வேண்டும்.

**முடிவுரை**

மரங்களை வளர்த்து மழைவளம் பெருக்க வேண்டும். தண்ணீர்ப் பற்றாக்குறையை முற்றிலுமாகப் போக்க வேண்டும்.

**“மழை நீரைச் சேகரிப்போம்!**
**வருங்காலத் தலைமுறையைக் காப்போம்!!”**

## தமிழ் இரண்டாம் தாள்

பிரிவு -1 மதிப்பெண் : 20 5x1=5

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கீழ்வருவனவற்றுள் தொடர் மொழி
   அ. அந்தமான் ஆ. மண் இ. படம்பார்த்தான் ஈ. கண்
2. கீழ்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடரை எடுத்து எழுதுக.
   அ. சென்று கேட்டான் ஆ. படித்த கயல்விழி இ. ஆடினான், பாடினான் ஈ. கோதை சென்றாள்.
3. பாலை நிலத்திற்குரிய பறவைகள்
   அ. கிளி, மயில் ஆ. நாரை, அன்னம் இ. புறா, பருந்து
   ஈ. கடற்காகம், கிளி
4. கீழ்வருவனவற்றுள் இனங்குறித்தல் சொல்லைத் தேர்ந்தெழுதுக.
   அ. விருப்பு வெறுப்பின்றி வாழ்ந்தான் ஆ. பச்சைப் பசேல் என்ற வயல்
   இ. இரவு பகல் பாராது உழைத்தான் ஈ. கதிர்வேல் வெற்றிலை தின்றான்
5. ‘நல்லவை’இச்சொல்லை அலகிட்டால் …………….. எனப் பிரியும்
   அ. நேர் நேர் ஆ. நிரை நேர் இ. நேர் நிரை ஈ. நிரை நிரை

## பகுதி – 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. 5x1=5

6. ‘வௌவால்’ இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் ………………
7. ‘கிளிபோலப் பேசினாள்’ - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு …………
8. ‘மாலை’ என்பது ………… திணைக்குரிய சிறுபொழுது
9. ‘ஆடத்தெரியுமா’? என்னும் வினாவிற்குப் ‘பாடத்தெரியும்’ எனக் கூறுவது ……………..

UserMedia.blogspot.com

10. 'மரவடி' இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி ………………..

## பகுதி -3

**சுருக்கமாக விடையளிக்க:** **10x1=10**

11. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றைச் சான்று தந்து விளக்குக

12. உருவகத்தை உவமையாக மாற்றுக………முகமதி

13. கீழ்க்காணும் தொடரை மாற்றி அமைக்க.

    திருக்குறளை அனைவரும் அறிவர் -- வினாத் தொடராக மாற்றுக.

14. கீழ்க்காணும் தொடரில் உள்ள ஒருமை, பன்மை பிழை நீக்கி எழுதுக.
    பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை

15. கீழ்க்காணும் தொடரில் சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
    தமிழில் வரலாற்று கருத்துக்களையும், பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்

16. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எழுதுக.
    இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.

17. தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
    ஐந்திணை

18. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
    அம்பேத்கா் ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது என்றார்.

19. உவமைகளைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
    பசுமரத்தாணிபோல

20. மரபுத் தொடருக்கேற்ற பொருளை எழுதுக.
    இளங்கோவின் குடும்பத்தினா் வாழையடிவாழையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனா்.

## பிரிவு – II

(மதிப்பெண்கள் : 10)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க: 5x2=10

21. ஆய்தக் குறுக்கம் - எடுத்துக்காட்டுடன் விளக்குக.

22. வினைச்சொல் என்றால் என்ன?

23. வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக: புரிந்த

25. செம்மை + மொழி – எவ்வாறு புணரும்?

26. ஐப்பசி, கார்த்திகை இரு திங்களும் எக்காலத்திற்கு உரியன?

27. பாடாண்திணை விளக்குக.

UserMedia.blogspot.com

பிரிவு – III
(மதிப்பெண்கள் : 50)

பகுதி – I

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்க. 2 x 5 = 10

28. நேரிசை ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

29. தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் - இதில் பயின்றுள்ள அணியை விளக்குக.

அல்லது

தற்குறிப்பேற்ற அணியைச் சான்று தந்து விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.
அரியவற்றுள் எல்லா அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

## பகுதி -2

கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைபக்க அளவில் விடையளிக்க. 2x5=10

31. மெல்ல மெல்ல மற என்னும் சிறுகதையில் கமலநாதன் எவ்வாறு மனம் திருந்தினான் என்பதை சுருக்கி வரைக.

32. அன்றாடம் வாழ்வில் பயன்படுத்தும் சட்டங்களில் இரண்டினைக் குறித்து எழுதுக.

33. தமிழகத்தில் நூலகத் துறையின் வளர்ச்சி பற்றி எழுதுக.

## பகுதி - 3

34. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.
3+2=5

அ) ‘டாடி, வர்ற சண்டே எனக்கு பர்த்டே: ஆனால், நீங்க இன்னும் எனக்கு டிரஸ் எடுக்கவில்லையே வொய் டாடி? என்னோட பிரண்ட்ஸையெல்லாம் வீட்டுக்குவரச் சொல்லியிருக்கேன்.

ஆ) கீழுள்ள அரபு எண்களைத் தமிழெண்களாக மாற்றுக:
25, 41, 190, 120

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பகுதியைத் தமிழாக்கம் செய்க: 3+2=5

அ) Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

UserMedia.blogspot.com

1. Old is gold
2. No Pain no gain
3. Knowledge is power
4. Haste makes waste.

## பகுதி -4

**36.** கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 1x5=5

அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

மறுநாள் காலையில் தேர்வு தொடங்குகிறது. அன்று இரவு வெகுநேரம் கண்விழித்துப் படிக்கத் திட்டமிட்டிருந்தான் பார்த்திபன். நேரம் இரவு பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது அவன் எதிர்பாராத விதமாக ………..

அல்லது

ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்கு குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.
பள்ளி அல்லது முயற்சி

## பகுதி -5

**37.** கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் ஏதேனும் ஐந்தினை எடுத்தெழுதுக. 1x5=5

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
 தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
 தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
 சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
 அதைவணக்கம் செய்தல் வேண்டும்
 - பாரதியார்.

## பகுதி – 6

**38.** கொடுக்கப்பட்டுள்ள வங்கிப் படிவத்தை நிரப்புக. பெயர், நிரப்பும் இடத்தில் உமது பதிவு எண்ணை மட்டும் எழுதுக. 1x5=5

## பகுதி – 7

39. அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க: 3+2=5

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாட்களாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதாக வருகின்றான். காரணம் கேட்டால், உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

UserMedia.blogspot.com

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?

2. நாம் எப்படிப்பட்ட நண்பர்களோடு நட்பு கொள்ள வேண்டும்?

3. இச்சூழலில் பயன்படுத்த வேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க:

பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்று விடப் பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாக படித்துக் கொண்டிருந்தாள். பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டிற்கு வருகிறார். தந்தை வெளியூர் சென்றிருக்கிறார் என்று பூங்குழலி கூறினாலும் அவர் அதைக் கேட்காமல், அவளிடம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

1. அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள்?
2. நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

## பிரிவு – 4

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி -1

**40.** கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க: 1x10=10

அ) நும் ஊரில் சாலைகளில் மின்விளக்கு வசதி வேண்டி மின்வாரிய தலைவருக்கு விண்ணப்பம் வரைக.

அல்லது

ஆ) உம் பள்ளியிலிருந்து ஓய்வு பெறும் தமிழாசிரியரைப் பாராட்டி பாராட்டு மடல் ஒன்று வரைக.

## பகுதி – 2

41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. – தலைப்பு ஒன்று தருக. 1x10=10

அ) ஊரின் அமைப்பு – வரலாற்றுச் சிறப்பு – சிற்பங்களின் அழகு – பாதுகாக்கும் முறை – நமது கடமை

அல்லது

ஆ) நீரின்றி இயங்காது உலகம் - நீர் நிலைகள் அடிப்படை – பற்றாக்குறை ஏற்படக் காரணம் - நீரைச் சேமிக்கும் வழிகள் - மழை நீரைச் சேமித்தல் - நிலத்தடி நீரைச் சேமித்தல் வழிமுறைகள் - மரம் வளர்ப்போம் - மழை பெறுவோம்.

*******

UserMedia.blogspot.com

விடைக்குறிப்பு 5 X 1 = 5

| | | |
|---|---|---|
| 1 | படம் பார்த்தான் | 1 |
| 2 | படித்த கயல்விழி | 1 |
| 3 | புறா, பருந்து | 1 |
| 4 | கதிர்வேல் வெற்றிலை தின்றான் | 1 |
| 5 | நல் - லவை – நேர் - நிரை | 1 |

பகுதி -2

கோடிட்ட இடத்தை நிரப்புக: 5 X 1 = 5

| | | |
|---|---|---|
| 6 | ஔகாரக் குறுக்கம் | 1 |
| 7 | 'போல' | 1 |
| 8 | முல்லை | 1 |
| 9 | இனமொழி விடை | 1 |
| 10 | மகர ஈற்றுப் புணர்ச்சி | 1 |

பகுதி – 3

சுருக்கமாக விடையளி:

| | | |
|---|---|---|
| 11 | வல்லின மிகா இடங்கள் சரியாகஇருப்பின் மதிப்பெண் அளிக்கலாம் (ஒன்றினுக்கு மட்டும்) | 1 |
| 12 | மதிமுகம் | 1 |
| 13 | திருக்குறளை யார்அறிவர்? | 1 |
| 14 | ஒருமை பன்மை பிழைநீக்கி எழுதுக.<br>பெண்கள் பெற வேண்டியவை, பெண் கல்வி, பெண் உரிமை, சொத்துரிமை | 1 |
| 15 | தமிழில் வரலாற்றுக் கருத்துக்களையும், பண்பாட்டுக் கூறுகளையும் காண முடியும் | 1 |
| 16 | இந்த மேலாடை மிகவும் விலை உயர்ந்தது | |
| 17 | ஐந்திணை = ஐந்து + திணை<br>குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை | 1 |
| 18 | கீழ்க்காணும் உரைப் பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.<br>அம்பேத்கார், "ஓர் இலட்சிய சமூகம், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" என்றார். | 1 |
| 19 | உவமைகளைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக பொருத்தமான வாக்கியம் இருப்பின் மதிப்பெண் அளித்திடுக | 1 |
| 20 | இளங்கோவன் குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாக வேளாண்மைத் தொழில் செய்து வருகின்றனர். | 1 |

UserMedia.blogspot.com